பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 08 செவ்வாய்க்கிழமை (23-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:364

# 2 கோடி இலங்கையரின் தலைவிதி
# பிரபாவின் ஒரே ஒரு வார்த்தையில்!

## 27 ஆம் திகதி அந்த முடிவு தெரியும் மிரட்டுகின்றார் ஈழவேந்தன் எம்.பி.



கொழும்பு,நவம்பர்23

**இலங்கையில் வாழும் இரண்டு கோடி மக்களின் தலைவிதி, தேசியத் தலைவர் பிரபாகரனின் ஒரு வார்த்தையிலேயே தங்கியிருக்கின்றது. எதிர்வரும் 27ஆம் திகதி அவர் ஆற்றப்போகும் உரையை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ளவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர். இந்த அரசு இப்படியே சமாதானத்தை இழுத்தடித்துக்கொண்டு சென்றால் அதற்கான பதிலை பிரபாகரன் தருவார். மாவீரர்தின உரையில் அவர் சொல்லப்போகும் ஒரு வார்த்தைதான் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப்போகிறது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தன் இவ்வாறு மிரட்டல் விடுத்தார்.**

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான மூன்றாவது நாள் விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஈழவேந்தன் இப்படியான ஒரு மிரட்டலை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவம் அடாவடித்தனம் புரிகின்றது. அதேபோன்று கொழும்பிலும், புறநகர்ப் பிரதேசங்களிலும் வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவெனத் தமிழீழ விடுதலைப் புலிகள் உங்கள் தலைநகரில் முகாம்களை அமைத்தால் அதனால் ஏற்படும் விபரீதங்களுக்கு யார் பொறுப்பேற்பர்?.

எதிர்வரும் 26ஆம் திகதி தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள், தொடர்ந்து மாவீரர்தினமும் வருகிறது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இவற்றை வெகுசிறப்பாக விழாவெடுத்துக்கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனை முறியடிக்கவும், மக்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்தவும், இராணுவத்தினர் திட்டமிட்டு மேற்கொண்ட ஒரு சதிதான் வல்வெட்டித்துறையில் இளைஞர்களின் படுகொலை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தனிநாடு குறித்து தமிழ் எம்.பி.கூறியவற்றை நாடாளுமன்றப் பதிவிலிருந்து நீக்கமுடியாது

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

சபையில் உரையாற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுச் சுதந்திரத்தில் தலையிடவோ, அவர்கள் வெளியிடும் கருத்துக்களை மட்டுப்படுத்தவோ இந்தச் சபைக்கு அதிகாரம் இல்லை. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தியின் உரையை நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்க முடியாது என ஒரு தீர்ப்பை வழங்கினார் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார.

கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜெயானந்த மூர்த்தியின் உரை குறித்து ஜே.வி.பி. உறுப்பினரான எஸ்.அமரசிங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

அதாவது, இந்தச் சபையில் ஓர் உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்யும் போது இந்த நாட்டின் அரசமைப்பை ஏற்றுக் கொண்டு, அதற்கு விரோதமாகச் செயற்படமாட்டோம் என்றும் நாட்டுப் பிரிவினைக்குத் துணைபோகமாட்டோம என்றும் நாம் உறுதி எடுத்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் அப்படியே பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

ஆனால், இந்தச் சபையில் உரையாற்றும் எல்லாத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் நாட்டின் அரசமைப்பை விமர்சிப்பதோடு, அதற்கு விரோதமாகவே பேசுகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய சிறப்புரிமையைக் கவசமாக உபயோகித்துத் தனிநாடு உருவாக்குவோம். சுயாட்சி அமைப்போம். தமிழீழ யாப்பை உருவாக்குவோம் எனச் சூளுரைக்கின்றனர். இப்பொழுது உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி இதே கருத்துக்களை முன்வைத்துப் பேசுகின்றார். அவருடைய பேச்சு நாடாளுமன்றப் பதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தினத்தன்று ஏ-9 வீதியை நள்ளிரவு 12 வரை திறக்க ஏற்பாடு

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி ஏ-9 வீதியை இரவு 12 மணி வரை திறப்பதற்கு கொள்கை அளவில் இணககம் காணப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை வவுனியா போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினரின் வேண்டுகோளுக்கு அமைய சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும இடையில் நடந்த இந்தச் சந்திப்பில் முக்கியமாக மாவீரர் தின நிகழ்வு தொடர்பாகவும் ஏ-9 வீதி தொடர்பாகவும், ஆராயப்பட்டது. பூந்தோட்டத்தில் பொலீஸாரினால் புதிதாக அமைக்கப்படும் மூன்று காவலரண்கள் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும் -

இவற்றினை உடனடியாக அகற்ற நடவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமண்டபங்களில் புலிக்கொடி ஏற்ற படைத்தரப்பு தடையாக இருக்காது

### வன்னி இராணுவத் தலைமையகம் நேற்று தெரிவிப்பு

வவுனியா,நவ.23

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச அலுவலகங்களில் புலிக்கொடி பறக்கவிடப்பட்டால் மட்டுமே இராணுவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது மண்டபத்தில் கொடியைப் பறக்க விடும் பட்சத்தில் இராணுவம் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை -

- இவ்வாறு வன்னி இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று வவுனியா முத்தையா மண்டபத்தில் மாவீரர்களின் பெற்றோருக்கான கௌரவ நிகழ்வு நடைபெற்றபோது அந்தப் பகுதிக்கு அனுப்பப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று தேடுதல்

கொழும்பு,நவ.23

மட்டக்களப்பு நகரில் பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்றுக் காலை பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான பொலீஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டனர். சந்தேகத்துக்குரிய - தெரிவுசெய்யப்பட்ட -ஆறு வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஒரு வீட்டு வளாகத்தில் இருந்து ஒரு கைக்குண்டு மீட்கப்பட்டது. இன்னொரு பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சோதனைச் சாவடிகளும் நிறுவப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலீஸ பிரிவின் குற்றத்தடுப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது. தொடரும் கொலைச் சம்பவங்களையடுத்து இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(எ-க-7)

## புத்தளத்தில் குண்டுப் பீதி; கற்பிட்டியில் சூறாவளி அச்சம்!

புத்தளம் - கொழும்பு வீதியில் கைவிடப்பட்ட நிலையில் குண்டு ஒன்று நேற்று மாலை 5.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டது.

குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினர், அக்குண்டைச் செயலிழக்கச் செய்தனர்.

குறித்த இடத்திற்கு குண்டு எப்படி வந்தது என்பது குறித்து புத்தளம் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, புத்தளம், கற்பிட்டிப்பிரதேசத்தை சூறாவளி தாக்கலாம் என்ற அச்சத்தில் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு நகர்ந்தனர். பீதியும் அவர்களைப் பிடித்துக்கொண்டது.

எனினும், ஒலிபெருக்கி அறிவித்தல் மூலம் பிரதேச செயலாளர் அச்சத்தைத் தணித்தார். கற்பிட்டி கடலிலிருந்து எழுபத்தைந்து கிலோ மீற்றருக்கு அப்பால் தாழமுக்கம் உள்ளது என்றும், அது பிரதேசத்தைத் தாண்டிச் செல்கின்றது என்றும் அவர் அறிவிப்புச் செய்தார்.

கற்பிட்டிப் பகுதியில் நேற்று கடும் மழை பெய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-164)

## சுன்னாகம் வீதி விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,நவ.23

சுன்னாகம் சந்தியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் போக்குவரத்துச் சபை பஸ்ஸும் - சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து கோண்டாவிலில் வசித்து வந்தவரான செல்வ்பா சாந்தகுமார் (வயது48) என்பவரே விபத்தில் உயிரிழந்தார்.

சுன்னாகம் சந்தையில் மரக்கறி விற்றுவிட்டு வீடு நோக்கி அவர் சென்றுகொண்டிருந்த சமயம் விபத்தில் சிக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலமும், சைக்கிளும் பஸ்ஸுக்குக் கீழே இருந்து இழுத்து எடுக்கப்பட்டன. மரண விசாரணைக்காகச் சடலம் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது.

சாரதி கைதுசெய்யப்பட்டார். பஸ் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(எ-3-7-86-139)

## முற்றவெளிப் பகுதியில் மினி சூறாவளி தபாலகக் கூரைத்தகடுகள் பறந்தன

யாழ்ப்பாணம்,நவ.23

நேற்று முற்பகல் திடீரென வீசிய மினி சூறாவளியினால் யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தின் கூரைகள் பலத்த சேதமடைந்தன.

முற்பகல் 11.30 மணியளவில் வீசிய சூறாவளி 3 நிமிடங்கள் நீடித்தது. இதனால் முற்றவெளிப்பகுதியிலுள்ள யாழ்.பிரதம தபாலகத்தின் கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்டன. அத்துடன், தபாலகத்தின் மேல் தளத்தில் பொருத்தப்பட்டிருந்த 'லெவல்' சீற்றுகள், மின் விளக்குகள், மின்விசிறிகள் என்பன உடைந்து வீழ்ந்தன. இதனால் அங்கு பணியில் இருந்த இரண்டு ஊழியர்களுக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன.

பரமானந்தம் கண்ணதாசன் (வயது 32), [illegible] (வயது 57) ஆகியோர் சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தபாலகத்தின் பிராந்திய கணக்கீட்டு அலுவலகம், நிர்வாக அலுவலகம் என்பன இந்த மினி சூறாவளியினால் பலத்த சேதத்துக்கு உள்ளாகின. தபாலகத்தின் கூரைப்பகுதிக்குப் பொருத்தப்பட்டிருந்த தகரத்தினாலான கூரைத் தகடுகள் கடும் காற்றினால் சுருண்டு போய்க் கிடந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இது தொடர்பாகக் கட்டடத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்கும், அஞ்சல்மா அதிபருக்கும், பிரதி அஞ்சலதிபர் நாயகத்துக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபட்டவரை வைத்தியசாலையிலிருந்து படையினர் கடத்தியமைக்கு ஆட்சேபம்

## வல்வை வைத்திய அதிகாரி பொலீஸுக்கு முறைப்பாடு

கரவெட்டி,நவ.23

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட ஈபிடிபி. உறுப்பினரான பொன்னுத்துரை தெய்வேந்திரன் தொடர்பாக மேற்படி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாள் வல்வெட்டித்துறை பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்திருப்பதுடன், அந்த முறைப்பாட்டின் பிரதிகளை யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுப் பிரதிநிதி மற்றும் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

அவர் அந்த முறைப்பாட்டில் தெரிவித்திருப்பதாவது:-

பொன்னுத்துரை தெய்வேந்திரன் என்ற நோயாளி சூட்டுக் காயத்துடன் இம்மாதம் 19 ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 20 ஆம் திகதி பிற்பகல் 3 மணியுடன் அவர் காணாமற்போய்விட்டார். அவர் இராணுவத்தினரால் கொண்டுசெல்லப்பட்டுவிட்டார் என்று நான் பின்னர் அறிந்து கொண்டேன்.

எனக்கு அறிவிக்கவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள் எனத் தெரியவில்லை. வைத்தியசாலையில் உள்ள குறிப்பேட்டிலும் எதுவும் எழுதப்படவுமில்லை. மேலும் நீங்கள் அனுப்பியிருக்கும் பொலீஸ் ரிக்கெட்டை எதுவித பதிவுகளுமின்றி இத்துடன் திருப்பி அனுப்புகின்றேன்.

பொலீஸாரின் கீழ் நடைபெறும் சிவில் நிர்வாகத்தில் நோயாளர் விடுதிகள் உட்பட வைத்தியசாலையின் பணிகளை முடங்கச் செய்துள்ளதுடன், அச்சத்தினால் பல நோயாளர்களை வெளியேறவும் செய்ய வைத்துள்ளது.

மேலும், எதிர்காலத்தில் இவ்வாறு வைத்தியசாலை இராணுவ மயமாக்கப் படுவதிலிருந்து தவிர்க்க உதவும் படியும் கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு வைத்திய அதிகாரி தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ப-க-70)

# சரத்அம்பேப்பிட்டியவின் இறுதிக்கிரியை நேற்று

கொழும்பு,நவ.23

கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்றன. இதனால் நாடுமுழுவதும் நீதித்துறை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

நாடுமுழுவதிலும் உள்ள நீதிமன்றங்கள் நேற்று மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் பூதவுடலுக்கு நீதித்துறை சார்ந்தவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் அஞ்சலி செலுத்தினர்.

சரத் அம்பேப்பிட்டியவின் பூதவுடல் பூரண அரச மரியாதைகளுடன் நேற்று மாலை 4 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. (எ-க)

# உரும்பிராய் பாடசாலை ஆசிரியர் நேற்றையதினம் வகுப்பு பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

உரும்பிராய் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர், ஆசிரியர் ஒருவரை அறையில் வைத்து தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து சக ஆசிரியர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை குறித்த ஆசிரியருக்கும் அதிபருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து அதிபர், ஆசிரியரை அலுவலகத்தில் வைத்து தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து, சக ஆசிரியர்கள் நேற்று கற்பிப்பதற்கு வகுப்பறைக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் குறித்துக் கேள்வியுற்ற யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் பாடசாலைக்குச் நேரடியாக விஜயம் செய்து விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணைகள் மூலம் பாடசாலையில் நிலவிய நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டதாக வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (எ-7)

# சட்டத்தரணிகளின் சேவைப்புறக்கணிப்பால் குடாநாட்டு நீதிமன்றங்களும் செயலிழந்தன

யாழ்ப்பாணம்,நவ.23

மேல் நீதிமன்ற நீதிபதி அம்பேப்பிட்டியவின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவரது இறுதிக்கிரியைகள் நடைபெறுவதனையும் முன்னிட்டு யாழ்.குடாநாட்டிலுள்ள நீதிமன்றங்கள் யாவும் நேற்று செயலிழந்தன.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அம்பேப்பிட்டிய கடந்த வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் வைத்து பாதாள உலகக் கோஷ்டியினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக அவரது இறுதிக்கிரியைகள் இடம்பெறும் தினத்தில் நாட்டிலுள்ள சகல நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளை கடமையில் ஈடுபடாது சேவைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனை ஏற்று யாழ்.குடாநாட்டிலும் சகல நீதிமனறங்களின் சட்டத்தரணிகளும் நேற்றைய தினம் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால், யாழ்.மேல் நீதிமன்றில் ஜூரி சபையினர் முன் இடம்பெற இருந்த ரகாலை வழக்கு உட்பட சகல வழக்குகளும் ஒத்தி வைக்கப்பட்டன. (எ-5)

# 'ஒளியின் பிரசவம் - 2004' திரைப்படவிழா நேற்று வைபவரீதியாக ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம்,நவ.23

'ஒளியின் பிரசவம் - 2004' திரைப்படவிழாவும் புகைப்படக்கண்காட்சியும் நேற்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் ஆரம்பமாகின.

கண்காட்சியை நாடாவை வெட்டி யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தால் நடத்தப்படும் இக்கண்காட்சியில் 'உலக உன்னதங்கள்' என்ற தலைப்பில் இணையத்தளத்தில் இருந்து கலைஞர் ஆர்.ஸ்ரீநிவாசனினால் சேகரிக்கப்பட்ட, இருபதாம் நூற்றாண்டின் சிறந்த பத்திரிகைப் புகைப்படக் கலைஞரான பிரஸ்யோவின் புகைப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மாலை 5 மணியளவில் இயக்குநர் மஜீத் மஜீதியின் சில்ட்ரன் ஆப் ஹெவன் எனும் ஈரானியத் திரைப்படக் காட்சியும் நடைபெற்றது.

இன்று உலகின் மிக முக்கிய புகைப்படக் கலைஞரான அல்சல் அடம்ஸின் 'டாக்குமென்ரரி' எனும் திரைப்படமும், நாளை குஜராத்தில் நடந்த மதக்கலவரம் பற்றி ராகேஷ் ஷர்மாவின் இயக்கத்தில் உருவான 'பைனல் சொல்யூஷன்' எனும் திரைப்படமும், நாளை மறுதினம் ஜான் ஆபிரஹாமின் இயக்கத்தில் உருவான அம்ம 'அறியான்' என்னும் மலையாளப் படமும், 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கான் திரைப்படவிழாவில் முதற் பரிசுபெற்ற, மைக்கேல் மூரின் உருவாக்கத்தில் வெளியான '9/11 பாரன் ஹீட்' எனும் ஆங்கிலப் படமும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

திரைப்படக்கண்காட்சிகள் யாவும் தினமும் மாலை 5 மணிக்கும் புகைப்படக் கண்காட்சிகள் யாவும் தினமும் காலை 9 மணி முதல் 4 மணிவரையும் நடைபெறும்.

அத்துடன், 'யாழ். பதிவுகள்' எனும் தலைப்பிலான புகைப்படக்காட்சி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும். (எ-5-203)

# நீதிபதி சரத்தின் கொலையின் பின்னணி தீவிரவாத இயக்கம் என்கிறது ஹெல உறுமய!

## அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்றும் கேள்வி

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் படுகொலையின் பின்னணியில் பயங்கரவாத இயக்கம் ஒன்றே செயற்பட்டுள்ளது. அது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

ஜாதிக ஹெல உறுமய கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான வண.அத்துரலிய ரத்னசார தேரர் நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, "இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடமுடியாது" - எனப் பதிலளித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினராக வண.அத்துரலிய ரத்னசார தேரர் சபாநாயகரின் அனுமதியுடன் மேல் நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் கொலை தொடர்பான கவனஈர்ப்புப் பிரேரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி நீதித்துறையில் துணிச்சலாகச் செயற்பட்டவர். புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தார்.

அதேபோன்று பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற தமிழ்க் கைதிகளின் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த பொலீஸாருக்கு மரண தண்டனை விதித்தவரும் இவரே. அவர் கொலை செய்யப்பட்ட தினத்தன்று கூட போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட தமிழ்ப் பெண்மணி ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளார்.

எனவே, மேல் நீதிமன்ற நீதிபதியின் படுகொலையின் பின்னணியில் ஒரு தீவிரவாத இயக்கம் செயற்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது.

இவ்விடயத்தில் இன்றுவரை அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இப்படியான படுகொலையைத் தடுப்பது எப்படி? என வண. அத்துரலியரத்னசார தேரர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பதில் அளித்தார். மேல் நீதிமன்ற நீதிபதியின் படுகொலை தொடர்பான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க சகல நடவடிக்கைகளும மேற்கொள்ளப்பட்டுள்ளன. எல்லா விடயங்களையும் வெளிப்படையாகக் கூறமுடியாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார். (எ-க)



ஒளியின் பிரசவம் - 2004 திரைப்படவிழாவும் புகைப்படக் கண்காட்சியும் யாழ்.பல்கலைக் கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நேற்று ஆரம்பமாகின.

கண்காட்சியை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த படங்களில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். *(படங்கள்:வசந்தன்)*

# கௌரவிப்பு நிகழ்வுகள்

மாதகல்,நவ.23

மாவீர்தின ஏற்பாட்டுக்குழுவினால் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மாரீசன்கூடல் புனித கயித்தார் சனசமூக நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாதகல் வலய அரசியல் துறைப்பொறுப்பாளர் ரமேஸ் கலந்துகொள்வார். (எ-95)

★ ★ ★

மாதகல்,நவ.23

மாவீரர் தின ஏற்பாட்டுக்குழுவினால் இளவாலை புனித யூதாததேயு சனசமூக நிலைத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.(எ-95)

★ ★ ★

மாதகல்,நவ.23

மாவீர்தின ஏற்பாட்டுக்குழுவினால் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இளவாலை உயரப்புயல் சனசமூக நிலையத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-95)

# மருதமுனையில் நேற்று மாணவர் ஆர்ப்பாட்டம்

மருதமுனை,நவ.23

மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஸம்ஸ் மத்திய கல்லூரியின் 10ஆம் வகுப்பு மாணவன் முஹம்மது முபாறக் முஹம்மது பாஸித் படுகொலை செய்யப்பட்டு ஒரு மாத காலமாகியும், அவரது கொலை தொடர்பாக நீதித்துறையும், பொலீஸாரும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து அதை ஆட்சேபிக்கும் வகையிலேயே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களோடு ஆசிரியர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பலகோஷங்கள், சுலோகங்கள் அடங்கிய படங்களை ஏந்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஸம்ஸ் கல்லூரியின் உயர்தர மாணவன் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இக்கொலை இடம்பெற்று சுமார் ஒருமாத காலமாகியும் கொலை தொடர்பில் எவ்விதமான காத்திரமான நடவடிக்கைகளையும் பொலீஸாரோ, நீதித்துறையினரோ எடுத்தார்கள் எனத் தெரியவில்லை.

எமது சகபாடியான பாஸித்தின் கொலை தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்னிறுத்துமாறு கேட்டுக்[illegible] சம்பந்தப்பட்ட தரப்பினர் [illegible] கரிசனை எடுத்து [illegible] கொள்ளவேண்டும் - என்றார். (எ-க)

## மாவீரர் நாள் - 27

மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கு மேலாகத் தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ளவேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகிவிட்டார்கள்.

- தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகத்தில் 15 பஸ்கள் சேதமாக்கப்பட்டன!

தமிழகத்தின் குமரிமாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் 15 பஸ்கள் கல் வீச்சுக்கு இலக்காகி சேதமாக்கப்பட்டுள்ளன.

கொலை வழக்குத்தொடர்பாகக் காஞ்சி மடச்சங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதீய ஜனதா மற்றும் இந்து அமைப்புக்கள் நாடுமுழுவதும் போராட்டங்களை நேற்றுமுன்தினம் தொடக்கம் நடத்தி வருகின்றன.

இப்போராட்டங்களில் கலந்துகொண்டவர்களே மேற்படி பஸ்களை கல்வீசி உடைத்து சேதமாக்கியுள்ளனர். இதனையடுத்து, மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலீஸார் நேற்றுக்காலை முதல் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு, ஜெயேந்திரர் சுவாமிகளின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விஸ்வ ஹிந்து பரிஷத் நேற்று நாடு முழுவதும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தது.

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதையடுத்து குமரி மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் நாகர்கோயில் நகரில் பெரும்பாலான கடைகள் திறந்தே இருந்தன.

இதேவேளை -

ஜெயேந்திரரிடம் நடத்தப்பட்ட 3 நாள் பொலீஸ் விசாரணை நேற்றுக்காலை முடிவுற்றது. இந்த 3 நாள்களில் ஜெயேந்திரரிடம் பொலீஸார் சுமார் 150 கேள்விகளைக் கேட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் முக்கிய கேள்விகளுக்கு ஜெயேந்திரர் பதில் அளித்தார் எனப் பொலீஸார் திருப்தியுடன் தெரிவித்துள்ளனர்.



ஜெயேந்திரர் கூறிய பதில்களின் அடிப்படையில் விஜயேந்திரரின் தம்பி ரகு மற்றும் சங்கரமட நிர்வாகிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. மேலும், வரதராஜப்பெருமாள் கோயில் அலுவலகத்திலும் பொலீஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

ஜெயேந்திரிடம் பொலீஸார் விசாரணை நடத்தியபோது கொலைக்கும் சங்கரமடத்திற்கும் உள்ள தொடர்பை நிருபிக்கும் ஆதாரங்களைப் பொலீஸார் காட்டினர் என்றும் -

அதற்கு ஜெயேந்திரர் பதில் ஏதும் சொல்லாமல் தொடர்ந்து மௌனம் சாதித்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயேந்திரரிடம் நடத்தப்பட்ட 3 நாள்கள் விசாரணை முழுவதையும் பொலீஸார் 2 வீடியோ நாடாக்களில் பதிவுசெய்துள்ளனர். எழுத்து மூலமாகவும் ஜெயேந்திரர் வழங்கிய வாக்கு மூலமும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை ஜெயேந்திரரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. வழக்கமான பூஜைகளை செய்ய அவர் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் ஜெயேந்திரர் சுவாமிகள் காஞ்சிபுரம் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆஜர்படுத்தப்பட்டார். ஜெயேந்திரரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். ஜெயேந்திரர் வேலூர் சிறையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஜெயந்திரரிடம் மேலும் ஒரு நாள் விசாரணை நடத்தவேண்டும் என்று பொலீஸார் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று நடந்தது. இதற்கான அனுமதி வழங்கமுடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஜெயேந்திரரை பிணையில் விடுவிக்க வழக்கறிஞர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், பிணையில் விடுதலை பெற விருப்பம் இல்லை என்று ஜெயேந்திரர் உறுதிபடக்கூறி விட்டார் - எனத் தெரிகிறது.

(க-3)

# நேபாளத்தில் 66 மாவோயிஸ்ட்டுக்கள் சுட்டுக்கொலை!

காத்மண்டு,நவ.23

நேபாளத்தில் இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதலில் 66 மாவோயிஸ்ட்டுத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதில் 10 இராணுவச் சிப்பாய்களும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னர் ஆட்சியை எதிர்த்து நேபாளத்தில் போராடிவரும் மாவோயிஸ்ட்டுக்கள் கடத்தல் மற்றும் பல வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் தலைநகர் காத்மண்டுவிற்கான பாதைகளை மூடி, பெரும் பொருள் விலையேற்றத்திற்கும் இவர்கள் காரணமாக அமைந்திருந்தனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த கைலாள மாவட்டத்திலுள்ள பாண்டன் எனும் கிராமத்திலேயே இம்மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது 66 மாவோயிஸ்ட்டுக்களைத் தாம் சுட்டுக்கொன்றனர் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(க-3)

# பங்களாதேஷ் தலைநகரில் பயங்கரத் தீ விபத்து!

டாக்கா,நவ.23


பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் உள்ள பிரபல சந்தைத் தொகுதியில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது.

இத் தீ விபத்தால் 2 ஆயிரம் குடிசை மற்றும் கடைகள் எரிந்து நாசமாகின; ஒருவர் பலியானார்; 15 பேர் காயமடைந்தனர்.

தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இத்தீவிபத்து ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை தீபற்றி எரியும் கடைகளைப் படத்தில் காணலாம்.

(க-3)

தீ பரவியபோது எடுக்கப்பட்டபடம்



# 4 இரும்புச் சுரங்கங்களில் தீ விபத்து; சீனாவில் 73 பேர் உடல் கருகிப் பலி!

ஹெபி,நவ.23

சீனாவில் நான்கு இரும்புச் சுரங்கங்களில் ஏற்பட்ட தீ விபத்தில் 73 பேர் உடல் கருகிப் பரிதாபகரமாகப் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

சீனாவில் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஹெபி என்ற இடத்தில் அமைந்துள்ள சுரங்கங்களிலேயே இத்தீவிபத்து ஏற்பட்டது.

முதலில் ஒரு சுரங்கத்திலிலேயே திடீரெனத் தப்பிடித்துக்கொண்டது. பிறகு ஏனைய சுரங்கங்களுக்கும் அத்தீ பரவியது. அங்கு வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்களில் 73 பேர் தீயில் அகப்பட்டு உயிரிழந்தனர்.

இவர்களில் 45 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 28 பேரின் உடல்களைக் காணவில்லை. மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சீனாவில் அடிக்கடி இவ்வாறு சுரங்க விபத்துக்கள் இடம்பெறுகின்றன. சீனாவின் பொருளாதாரத்தில் சுரங்க உற்பத்திகளே பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால், இச்சுரங்கங்களுக்குத் தேவையான பாதுகாப்பு வசதிகள் சரியாக வழங்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

(க-3)

# உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலில் மோசடி என எதிர்க்கட்சி வேட்பாளர் விக்டர் குற்றச்சாட்டு

உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலில் மோசடி இடம்பெற்றிருப்பதாக எதிர்க்கட்சியின் சார்பில் போட்டியிட்ட விக்டர் யுஷ்ச்சென்கோ குற்றஞ் சாட்டியுள்ளார்.



இத்தேர்தல் முடிவுகளைக் கண்டித்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மக்கள் நடத்தினர்.

எண்ணப்பட்ட 75 வீதமான வாக்குகளின அடிப்படையில் பிரதமர் விக்டர் யனுகுவச் 49 விமான வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளார். எதிர்த்துப் போட்டியிட்ட லிபரல் கட்சி வேட்பாளர் விக்டர் யுஷ்ச்சென்கோ 48 வீதமான வாக்குகளைப பெற்றுள்ளார் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் ஆதரவு பெற்ற பிரதமர் யனுக்குச்சை விட எதிர்க்கட்சி வேட்பாளரான விக்டர் யுஷ்ச்சென்கோவே அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார் என முன்னைய தகவல்கள் தெரிவித்திருந்தன.

நான் எனது வெற்றிமீது நம்பிக்கை கொண்டுள்ளேன். ஆனால், அரசு நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள டனட்ஸ் மற்றும் லுகான்ஸ் பிராந்தியங்களில் வாக்கு மோசடிகளில் ஈடுபட்டிருந்தது. நான் மத்திய தேர்தல் ஆணைக்குழுவை நம்பவில்லை.

- இவ்வாறு எதிர்க்கட்சி வேட்பாளர் யுஷ்ச்சென்கோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விக்டர் யுஷ்ச்சென்கோ அமைதி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருப்பதையடுத்து அதிக பொலீஸார் வீதிகளில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

(க-3)

# எதிர்வரும் ஜனவரி 30ஆம் திகதி ஈராக்கில் தேர்தலென அறிவிப்பு

பக்தாத்,நவ.23

ஈராக்கில் தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

இத்தேர்தலின் மூலம் ஈராக்கிய மக்கள் இடைக்கால நாடாளுமன்றத்துக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். தெரிவுசெய்யப்படும் புதிய நாடாளுமன்றம், புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும்.

பின்னர் அச்சட்டம் மக்களின் அங்கீகாரத்திற்காகக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு விடப்படும். அதன்பிறகு அடுத்த ஆண்டு முடிவிற்குள் இன்னொரு பொதுத் தேர்தலும் ஈராக்கில் நடத்தப்படும்.

ஈராக்கில் இப்போது வன்முறைகள் தொடர்ந்து கொண்டுள்ள போதிலும் தேர்தல் ஆணைக்குழு வேட்பாளர்களையும், வாக்காளர்களையும் பதிவுசெய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. தேர்தலில் மக்களைப் பங்கெடுக்க ஊக்குவிக்குமுகமாக ஈராக்கியத் தொலைக்காட்சியில் விளம்பரங்களையும் செய்துவருகிறது.

நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இத்தேர்தல், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உரிய காலத்தில் நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு சார்பாகப் பேசிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், ஜனவரி 30 இல் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் ஈராக்கிய அதிகாரிகள் சிலரிடம் நிலவுகின்றது என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் சில பகுதிகள் தேர்தலில் கலந்து கொள்ளாவிட்டால் அத் தேர்தலுக்கான [illegible] படியான அந்தஸ்து [illegible] முள்ளது எனவும் கூறப் படுகிறது. (க-3)




# ஈராக் பிரதமரின் உறவினர் தீவிரவாதிகளால் விடுதலை!

பக்தாத்,நவ.23

ஈராக்கில் அண்மையில் தீவிரவாதிகளால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்ட இடைக்கால அரசின் பிரதமர் இயத் அல்லாவியின் உறவினர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

காசி அல்லாவியே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார். இவர் பிரதமர் அல்லாவியின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக காசி அல்லாவியோடு கடத்தப்பட்ட அவரது மனைவி மற்றும் மருமகனைத் தீவிரவாதிகள் விடுதலை செய்திருந்தனர்.

பின்னர், காசி அல்லாவியும் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர் விடுதலை [illegible] அரச தொலைக்காட்சி [illegible] அரேபியா அறிவித்தது.

வேறு எந்தத் தகவல்களையும் அரேபியா தொலைக்காட்சி வெளியிடவில்லை. காசி அல்லாவி விடுதலை செய்யப்பட்டதை பக்தாத்தில் உள்ள ஈராக் இடைக்கால அரசின் செய்தித் தொடர்பாளர் உறுதி செய்யவில்லை.

இவர்களைக் கடத்திச் சென்ற தீவிரவாதிகள் பணயக்கைதிகளை விடுதலைசெய்ய இரு நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

பலூஜா நகரை முற்றுகையிட்டுள்ள அமெரிக்கப படையினர் வெளியேற வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள இஸ்லாமியப் போராளிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதாகும்.

இந்நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால், பணயக்கைதிகளின் தலைகளைத் துண்டிக்கப் போகிறார்கள் எனத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

ஆனால், இந்நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்படாமலேயே பணயக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடை முகாமைத்துவத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கார்த்திகை விளக்கீடு

விஞ்ஞான ரீதியான உண்மைகள் தான் இந்துமத சம்பிரதாயங்கள் எனப் பல இடங்களில் நிருபிக்கப்பட்டிருப்பதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

பயிராக்கவியல் சம்பந்தமான விடயத்திலே பீடைமுகாமைத்துவம் முக்கிய இடம்பெறுகிறது. பீடை முகாமைத்துவத்திலே உள்ள ஓர் இந்து மதச் சம்பிரதாயம் எப்படியான ஒரு பீடை முகாமைத்துவத்தை செய்கிறதென்பதை இங்கு நோக்குவோம்.

இந்து சமயத்தவர்களால் கார்த்திகைத் தீபம் (விளக்கீடு) கார்த்திகைமாத பௌர்ணமி தினத்தன்று ஏற்றப்படுகின்றது. திருவெண்ணாமலையில்தான் இது முதலில் ஆரம்பமாகியது. இன்றும் கூட அங்கு கார்த்திகைத் தீபம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கடந்த வருடம் அங்கு நடைபெற்ற கார்த்திகைத் தீபநிகழ்வுகளை தூரதர்ஷன் தொலைக்காட்சி முழுநேரமாக ஒளிபரப்புச் செய்ததை நாம் பார்த்துள்ளோம்.

எமது நாட்டிலே இன்று கார்த்திகைத் தீபம் ஏன் கொண்டாடப்படுகிறது என்ற சரியான தெளிவின்மை காரணமாக ஏதோ சம்பிரதாயத்துக்காகத் தடிகளில் பந்தங்களைச் சுற்றி எரிய விடுகிறார்கள்.

கார்த்திகைத் தீபத்தை பயிராக்கலுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கும்போது அதனுடைய விஞ்ஞான ரீதியிலான உண்மைகள் அந்தக் காலம் தொடக்கம் தமிழர்களால் - இந்துக்களால் - எந்தளவுக்குச் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதென்பதை நாம் உய்த்து உணர்ந்துகொள்ளமுடிகின்றது.

### பண்டைய கிராம அமைப்புமுறை

ஆரம்பகாலங்களிலே வாழ்ந்த மக்கள் தமது குடியிருப்புகளைப் பொதுவாக நதிகள், குளங்கள் போன்றவற்றை அண்மித்த இடங்களிலேயே அமைத்திருந்தனர். இக்குளங்களை அண்டி இருந்த நெல்வயல் நிலங்களைச் சுற்றி மக்கள் வாழ்ந்தனர். இதுதான் பண்டைய கால கிராம அமைப்பு முறையாக இருந்தது.

இக்கிராம அமைப்பு முறையிலே அக்கால மக்கள் ஒருபோகத்திலேயே நெற்செய்கையில் ஈடுபட்டனர். ஒருபோகத்தில் மட்டுமே கூடுதலாகப் பயிர்செய்தனர். இன்றுள்ளது போன்று திருந்திய நெல் வர்க்கங்கள் அன்று இருக்கவில்லை. அவர்களிடம் பாரிய - பெரிய வயதுள்ள நெல் இனங்களே இருந்தன. அவற்றை விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து போகத்துடனேயே பயிர்செய்தனர். போகத்துடனேயே அறுவடையும் செய்தனர்.

பயிர்ச்செய்கைப் பீடை முகாமைத்துவத்திலே விதைப்பு நாள், புதிதுண்ணல், கார்த்திகைத் தீபம் போன்ற சில சிறப்பு அம்சங்களை அவதானிக்கமுடிகிறது.

### விதைப்பு நாள்

எமது மக்கள் நாள், நட்சத்திரம் பார்த்தே எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிப்பார்கள். எமது பஞ்சாங்கங்களிலே நெல்விதைப்புக்கேற்ற காலங்கள் - நாள்கள் - குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆவணி, புரட்டாதி மாதங்களிலேதான் கூடிய அளவு விதைப்பு நாள்கள் குறிக்கப்பட்டிருக்கும். நெற்செய்கையை ஒரே நேரத்தில் மேற்கொள்வதே சிறப்பு. நெற்செய்கையை விதைப்பை ஒருமுகப்படுத்துவதற்காகவே விதைப்பு நாள்கள் என பஞ்சாங்கத்திலே நாள்களைக் குறிக்கிறார்கள். வன்னி மாவட்டத்தில் இன்றும் கூட ஐப்பசி மாதம் தொடக்கம் அடுத்த தை - மாசி வரை விதைப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பீடைகளும் அங்கு தொடர்ந்தேர்ச்சியாகப் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஒரே நேரத்தில் விதைப்பு மேற்கொண்டால் பீடைகளின் தாக்கம் ஓரளவு கட்டுப்படும்.

### புதிதுண்ணல்

ஒருமுகமாகக் குறிக்கப்பட்டதொரு காலத்தில் நெல்விதைப்புச் செய்த மக்கள் அப்படி விதைத்த நெல்லை ஒரே காலத்தில் அறுவடைசெய்து அவற்றை நல்லதொரு நாளில் சமைத்து உண்பதற்காக பஞ்சாங்கங்களில் புதிதெடுத்தல், புதிதுண்ணல் போன்றவற்றுக்குரிய நாள்களும் குறிக்கப்படும். அந்நாள்களில் விவசாயிகள் தாம் விதைத்து அறுவடைசெய்த புதிய நெல்லை உணவு சமைத்து, உற்றார், உறவினர்களோடு சேர்ந்து சந்தோசமாக உண்பார்கள். இதுபண்டைய கால வழக்கு. இவ்வழக்கம் இன்று அருகிவிட்டாலும் பல விவசாயக் குடும்பங்கள் அவற்றைப் பின்பற்றி வருகின்றன.

இவற்றுக்காகத் தான் சம்பிரதாயம், நல்ல நாள்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. அந்தச் சம்பிரதாயங்கள் எல்லாம் இன்று அருகிப்போய் விட்டன. சம்பிரதாயங்களை ஏனோ தானோ என்று சிலர் கைக்கொண்டு வருகின்றார்கள். இதனால், எமது பண்டைய நாகரிகங்கள், பண்பாடுகள் எல்லாம் இன்று கேள்விக்குறியாகி அழிந்துகொண்டு வருகின்றன.

### பயிராக்கலில் கார்த்திகைத் தீபம்

கார்த்திகைத் தீபம் கார்த்திகைப் பௌர்ணமியன்று கொண்டாடப்படுகிறது. ஐப்பசி போன்ற மாதங்களில் தீப விழாக்கொண்டாடாமல் ஏன் கார்த்திகைப் பௌர்ணமியில் கொண்டாடப்படுகிறது என்பதற்கு பயிரியல் தொடர்பான விஞ்ஞான விளக்கங்கள் உள்ளன.

நெற்பயிரைத் தாக்குகின்ற பீடைகள் மற்றும் பூச்சிகள் போன்றன கோடை காலத்தில் உறக்கநிலையில் அல்லது வேறு ஒழிந்த நிலையில் காணப்படும். பொதுவாக நெற்செய்கை ஆரம்பிக்கும்போது காலபோக மழை காணப்படும். மழைபெய்து வெளியில் நெல், புல் தோன்ற ஆரம்பிக்கும்போது, இதில் பீடைகளும் உயிர்த்து அவற்றில் தமது முதலாவது சந்ததியைப் பெருக்க ஆரம்பிக்கும். பீடைகள் யாவும் குறுகிய காலம் வாழ்பவை. 25-40 நாள்களுக்குள் தமது வாழ்க்கைச் சக்கரத்தை முடித்துக் கொள்பவை. ஒரு நெற்செய்கைக்காலத்தில் 3,4 சந்ததியை உருவாக்கும் வல்லமை இப்பீடைகளுக்கு இருக்கும். ஆகவே, இவை ஆவணி, புரட்டாதி மாத மழையிலே தமது முதலாவது சந்ததியை படிப்படியாக உருவாக்க ஆரம்பித்துக் கார்த்திகையில் நெற்பயிரில் ஒரு பொருளாதார ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு தமது சந்ததிப் பெருக்கத்தைப் ஏற்படுத்தும்.

### நிறை குடலைப் பருவம்

கார்த்திகை மாதத்திலே நெற்பயிரானது நிறை குடலைப் பருவத்தை அடைந்திருக்கும். நிறைகுடலைப் பருவம் என்பது இலகுவில் புறக்காரணிகளால் தாக்கப்பட்டு அழியக்கூடிய ஒரு பருவமாகும். ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணை நாம் எப்படிப் பராமரிக்கின்றோமோ அதேபோன்ற கவனத்துடன் நிறைகுடலைப் பருவ நெற்பயிரையும் கவனித்து வரவேண்டும்.

நிறைகுடலைப் பருவத்துக்கு முந்திய பருவங்களில் பயிரானது வீரியமுடன் காணப்படுவதால் புறத்தாக்கங்களை எதிர்த்துச் சமாளித்துக்கொள்ளும். தாக்கத்தின் இழப்பீடுகளைச் சமாளித்து வளரும் சக்தி அவற்றுக்கு உண்டு. ஆனால், குடலைப் பருவம் அண்மித்த பின்னர் பயிரானது தனது வீரியத்தன்மையை இழந்து விடுகின்றது. குடலைப் பருவம் வரும் காலம் கார்த்திகை மாதமாகும். ஏனைய காலங்களில் பீடைகள் இருந்தாலும் புறத்தாக்கல்களை எதிர்த்து இழப்பீடுகளை ஈடுசெய்யும் தன்மையுடன் பயிர்கள் வளர்ந்து கொண்டிருக்கும்.

ஆவணியில் பெருகத் தொடங்கிய பீடைகள் கார்த்திகையில் கிட்டத்தட்ட தமது மூன்றாவது சந்ததியை உருவாக்கியிருக்கும். தமது முதலாவது சந்ததியில் ஒருசோடி பீடைகள் கிட்டத்தட்ட நூறுக்கு மேற்பட்ட அடுத்த சந்ததியை உருவாக்கிவிடும். அது இரண்டாவது சந்ததியில் 10 ஆயிரத்துக்கு மேலாக உருவாகி, மூன்றாவது சந்ததியில் சுமார் ஒரு லட்சத்துக்கும் கூடுதலான பீடைகளாகக் காணப்படும். கார்த்திகை மாதத்தில் இவ்வாறு லட்சக்கணக்கான பீடைகள் உருவாகி இருக்கும். எனவே, இம் மாதத்தில் நெற்பயிரை பீடை தாக்கத்தில் இருந்து நாம் பாதுகாத்தே ஆகவேண்டும். இக்காலத்தில் பீடைகளை ஒழிக்கும் நடவடிக்கைகளை எடுத்தே தீரவேண்டும்.

### வெளிச்சத்தால் கவரப்படும் பீடைகள்

நெற்பயிரைத் தாக்குகின்ற பீடைகளின் பொதுவான ஒரு இயல்பு வெளிச்சத்தால் அவை கவரப்படும் தன்மையாகும். சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இருந்து கூட வெளிச்சத்தால் கவரப்பட்டு வெளிச்சத்தை நாடி ஓடிச்செல்லும் தன்மை இப்பீடைகளிடம் காணப்படும். எனவே, பயிரின் நிறைகுடலைப் பருவத்திலே பீடைகளை அழிப்பதற்காக விவசாயிகள் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

பண்டையகால விவசாயக் குடும்பங்களின் கிராம அமைப்பானது வயல்கள், குளங்கள் போன்றவற்றை அண்டி இருந்தன. இப்பகுதிகளில் கிராம மக்கள் வழிபடுவதற்கான கோயில்களும் காணப்படும். இக்கோயில்களில் அக்கிராமமக்கள்சென்று தமது வழிபாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கடமைகள், ஒன்றுகூடல்கள போன்ற காரியங்களைச் செய்து கொள்வார்கள். இதறகாகக் கோயிலகளை நன்கு பராமரித்தும் வந்தனர். கார்த்திகைப் பௌர்ணமியில் இக்கோயில்களில் கார்த்திகைத் தீபம் (விளக்கீடு) ஏற்றி சமயரீதியான சடங்கினை நிறைவு செய்வர்.

ஆலயங்களில் பனையளவு உயரத்தில் வன்னி மரத்தைநட்டு எரியக்கூடிய பொருள்களால் அதனைச் சுறறி, அதற்கு அவ்வூர் மககள் அனைவரும் கூடிநின்று செக்கல் பொழுதிலே - மாலைமங்கும் வேளையிலே - தங்களுடைய பங்கிற்கு எண்ணெய் - நெய் போன்றவற்றை ஊற்றி விடியவிடிய எரிய வைப்பார்கள்.

அவ்வாறு எரிய வைக்கப்படும்போது தீச்சுவாலை வானளாவ உயர்ந்து எரிந்து ஒளிப் பிளம்பாகத் தோன்றும். இதனை சொக்கப்பனை எரித்தல் என அழைப்பர். இவ்வாறு எரிப்பதன் மூலம் அசுரர்களை அழிக்கிறோம் என்ற சமய நம்பிக்கையுடன் இறைவனை சோதி வடிவில் கண்டு வழிபடுவர்.

ஒருகாலமும் வெளிச்சத்தை இந்த அளவில் கண்டிராத வயல்வெளிகளில் உள்ள பீடைகள் யாவும் சொக்கப்பனை வெளிச்சத்தை நாடி மகிழ்ச்சியுடன் ஓடி வரும். ஓடிவந்து அந்தத் தீபத்திலே அடிபட்டுவிழுகின்றன. ஜொலிக்கும் சுவாலையில் அடிபட்டால் தப்ப முடியுமா? அவை அனைத்தும் எரிந்து மடிந்துவிடும். கார்த்திகை மாதம் வரை சந்ததியாகப் பெருகிய அத்தனை பீடைகளும் அதாவது 99 சதவீதமான பீடைகள் - இவ்வாறு சொக்கப்பனை வெளிச்சத்தில் விழுந்து தமது வாழ்வை முடித்துக் கொள்கின்றன. பீடைகள் அழிந்த பின் பயிர்களும் இலகுவில் பாதுகாப்பாக வளர்கின்றன. இதுவே விளக்கீட்டு நாளின் உண்மைச் சமபிரதாய நிகழ்வாக இருக்கின்றது எனக் கூறலாம்.

இன்று நாம் ஏதோ ஒரு சம்பிரதாயத்துக்காக கார்த்திகைத் தீபநாளன்று சிறுசிறு தடிகளில் துணிகளைச் சுற்றி எண்ணெய் விட்டு ஆலயங்கள், வீடுகள், வயல்கள், குளக்கரைகள் போன்ற இடங்களில் கொளுத்தி வைக்கின்றோம். ஆனால், இவ்வாறு கொளுத்தப் படும் பந்தங்கள் ஒருசில நிமிடங்களில் - நாம் வடு வந்து சேர்வதற்கு முன்னதாகவே - அணைந்து விடுகின்றன.

### உண்மைகள் உணரப்படவேண்டும்

சம்பிரதாயங்கள், சடங்குகள் என்பனவற்றின் உண்மைத்தாற்பரியங்களை நாங்கள் விளங்கிக்கொண்டு அவற்றைச் சரியானமுறையில் கடைப்பிடித்தால் சம்பிரதாய சடங்குகள் அனைத்தும் நமக்குச் சாதகமான பலன்களைத் தரும்.

**கமமும் புலமும்**

**தயாரிப்பு: ஜெயஸ்ரீ**

கார்த்திகைத் தீபம் (விளக்கீடு) போன்ற சமயம் தொடர்பான சம்பவங்கள் இந்து சமயத்தில் நிறையவே உள்ளன. இச்சடங்குகள், சம்பிரதாயங்கள் யாவும் இன்று குருட்டுப் போக்கிலே மக்களால் அவற்றின் அர்த்தங்கள், பரிணாமங்கள் தெரியாமல் ஏனோதானோ என்ற நிலையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

**- வி.பி.சர்மா -**

இந்து சமய அமைப்புகள், ஆலயங்கள், புத்திஜீவிகள்,பல்கலைக்கழகங்கள் போன்றன இச்சம்பிரதாயச் சடங்குகளின் உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டும். சம்பிரதாயச் சடங்குகளின் விஞ்ஞான ரீதியிலான உண்மைகளை வெளிக்கொணரவேண்டும். இவ்வாறுசெய்வது அவற்றின் இன்றைய காலத்துக்குத் தேவையான கட்டாய கடமையாகும். ★


## தசாக கிருகயக்ஞ அழைப்பு



நிகழும் தாரண வருஷம் ஐப்பசி மாதம் 29 ஆம் நாள் (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை துதியை திதி கூடிய நேரத்தில் அகாலமரணமடைந்த எமது அன்பு மகன்

**பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் அரிகரசர்மா**

அவர்களின் ஆத்மா வைகுண்டவாகனனின் பாதமலரடைவதற்கு பின்வரும் தினங்களில் நடைபெறும் கிரியைகளில் கலந்து சிறப்பிப்பதோடு அவரின் ஆத்மா நாராயணனின் பாதம் சேர்வதற்கு பிரார்த்திக்கும்வண்ணம் வேண்டிக கொள்கின்றோம்.

23.11.2004 (கார்த்திகை 08) செவ்வாய்க்கிழமை தசாகம் (கல் எடுப்பு)
24.11.2004 (கார்த்திகை 09) புதன் புண்ணியாகவாசனம் (மாசியம், ஏகோதிஷ்டம்)
25.11.2004 (கார்த்திகை 10) வியாழன் சபீண்டிகரணம்
26.11.2004 (கார்த்திகை 11) வெள்ளி கிருகயக்ஞம்

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் 26.11.2004 வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறும் மதியபோசனத்தில கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

சுபமஸ்து

*மடத்தடிலேன், கல்வியங்காடு.* (38868)(16-18-32) பொ.வரதராஜக்குருக்கள் குடும்பத்தினர்.

**Walk in Interview**

**Post Receptionist (Female)**

Qualification
★Fluent in English and Tamil
★Basic knowledge in computer

Date: 25.11.2004 Time: 10.00 A.M.
Address:
No.15, Sirambiyady Lane, Jaffna.
Tel: 0777-222422

நீங்களும் அமெரிக்காவுக்கு செல்ல முடியும்.



அமெரிக்காவின் லொட்டரி வீசா

மேலதிக விபரங்களுக்கு

**திருமுருகன் கொம்நெற்**

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

## மரண அறிவித்தல்

### இராசையா செல்வரட்ணம்

(தெய்வேந்திரம் - வர்த்தகர்)



தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட இராசையா செல்வரட்ணம் (தெய்வேந்திரம்) நேற்று (22.11.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - துரையம்மா தம்பதிகளின் புதல்வனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் தம்பதிகளின் மருமகனும் சுதன் (நல்லூர், பல.நோ.கூ.சங்கம்), மதன் (பிரான்ஸ்), ஜெகன் (காலஞ்சென்றவர்), நீலன் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாதேவா (கனடா), துரைராசா (ஓய்வுபெற்ற லிகிதர்), பாலச்சந்திரன் (லண்டன்), இராசேந்திரம் (காலஞ்சென்றவர்), இந்திராணி, இந்திரராஜா (நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியம், இராஜேஸ்வரி (காலஞ்சென்றவர்), அன்னலட்சுமி, சிவசோதிநாதன் (ஓய்வுபெற்ற ல.சி. லிமிட்டெற் ஊழியர்), சற்குணநாயகி, சிவாநந்தன் (கனடா), கணேசமூர்த்தி, கணேசலிங்கம், சிவலிங்கம், ஜெயலட்சுமி (இத்தாலி), காலஞ்சென்ற சொர்ணலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (38863)(16-18)

தகவல்: இந்திரராஜா (கிளியன்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

# விதைத்ததை அறுக்கிறது தென்னிலங்கை

'தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டிய தாம்!' - என்பார்கள். அந்த மாதிரி ஒரு நடவடிக்கையை அரசு எடுத்திருக்கின்றது.

தயவு தாட்சண்யமின்றி கடுமையான தீர்ப்புக்களை வழங்கி வந்தவர் எனக் கருதப்படும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய கொழும்பில் பட்டப் பகலில் தமது வீட்டுமுன்றிலில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தென்னிலங்கையில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதற்குப் பதிலடி நடவடிக்கையாக மரண தண்டனைகளை இனிமேல் நிறைவேற்றுவது என்ற முடிவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு வந்திருக்கிறது.

நீதிபதி அம்பேப்பிட்டியவின் கொலை பாதாள உலகத்தின் கைவரிசை என்பதே நிரூபிக்கப்படாத உண்மை. அது பலருக்கும் தெரிந்த விடயமும்கூட.

பாதாள உலகக் கும்பல்களின் வாழ்வே 'நித்திய கண்டம்; பூரண ஆயுசு' என்ற அடிப்படையில் அமைந்ததுதான். அந்த உலகுக்குள் பிரவேசித்தவர்கள் ஒவ்வொருவரும் நித்தம் நித்தம் செத்துப் பிழைத்துக்கொண்டிருப்பவர்கள்.

மரணம் எக்கணமும் வரலாம் என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டுதான் - அதனால் விளைந்த விபரீத புத்தியினால்தான் - இத்தகைய கொடூரங்களை அவர்கள் இலகுவாகப் புரிகின்றார்கள். எனவே, குற்றவாளிகளுக்கு நீதிமன்றங்கள் விதிக்கும் மரணதண்டனைகள் இனிமேல் ஆயுள்தண்டனையாகக் குறைக்கப்படமாட்டா. அவை நிறைவேற்றப்படும் என்ற எச்சரிக்கை அந்தப் பாதாள உலகக் கும்பல்காரர்களை அச்சுறுத்தித் திருத்துமா என்பது சந்தேகத்துக்கு உரியதே.

எனவே, பாதாள உலகக் கும்பல்களை மிரட்டி, அடக்கும் ஒருவழியாக மரணதண்டனையை நிறைவேற்றும் முறைமைய மீண்டும் அரசு நடைமுறைக்குக் கொண்டுவருமானால் அது 'அவலை நினைத்து உரலை இடித்த' கதையாகவே முடியும்.

தென்னிலங்கையில் பாதாள உலகக் கும்பல்களின் அட்டகாசம் - கைவரிசை - இவ்வளவு தூரம் ஓங்குவதற்குக் காரணம் - மூலகாரணம் - என்ன? இதை யாரும் சிந்தித்தார்களா என்பதுதான் இப்போதைய கேள்வி.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை வினை விதைத்தவர்கள், வினை அறுக்கிறார்கள் அவ்வளவே. ஊழ்வினை வந்து உறுத்துவது தவிர்க்கமுடியாத இயற்கை நியதி.

வடக்கு - கிழக்கில் தமிழர் தம் உரிமைப் போராட்டம் வீறுகொண்டு எழுந்தபோது, அதற்கான நோய் முதல் நாடி தீர்வுகாணுவதை விடுத்து, மேலும் மேலும் அடக்குமுறையைத் தமிழர் தாயகம் மீது திணிக்க முயன்றன தென்னிலங்கைப் பேரினவாத அரசுகள். அதற்காக அவை எடுத்த நடவடிக்கைகளே பாதாள உலகக் கும்பல்கள் போன்றவற்றை தென்னிலங்கையில் தோற்றுவித்து, வளர்த்து, உயிரூட்டி, உச்சத்தில் உலவவிடக்காரணமாயிற்று.

தமிழர்களை - அவர்களின் விடுதலை போராட்டத்தை - அடக்குகின்றோம் என்ற பெயரில் தென்னிலங்கை அரசுகள் வகைதொகையின்றி சிறிய ரக ஆயுதங்களை வாங்கிக் குவித்தன; தென்னிலங்கைச் சிங்கள இளைஞர்களைக் கண்ணைமூடிக்கொண்டு படைக்குத் திரட்டின; அவர்கள் ஆயுதங்களைக் கட்டுப்பாடின்றி - கணக்கு வழக்கின்றி பயன்படுத்த அனுமதித்தன.

தமிழர்களுக்கு எதிராகத் தானே இந்த ஆயுதங்கள் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன என்ற மிதப்பில் - நினைப்பில் - பாராமுகமாக தென்னிலங்கை அரசுகள் இருக்க, அந்த ஆயுதங்கள் சுத்திக்கொண்டு திரும்பிவந்து தென்னிலங்கையையே சுடத் தொடங்கியிருக்கின்றன. அந்தச் சூட்டின் வெப்பம் தணலாய்த் தகிக்க, இப்போது தாங்கமுடியாமல் அல்லாடுகின்றது தென்னிலங்கை.

தமிழர்களை அடக்குவதற்கென்றே விசேடமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் அவசர காலச் சட்ட விதிகளின் கீழான விசேட ஏற்பாடுகளும், இராணுவ நடவடிக்கை முறைகளும் தென்னிலங்கை இளம் சமுதாயத்தை தாராளமாக ஆயுதமயப்படுத்தின; ஆயுதப் பயன்பாட்டு விவகாரங்களில் யாருக்கும் பதில் கூறாமல் இயங்கும் தாராள தளர்வுப்போக்கை அவர்களுக்கு வழங்கின.

விளைவு....?

ஆயுதங்களின் பழக்கமும், பரிச்சயமும் கையாளும் திறமையும் உடைய இவற்றுக்கு மேலாக தாங்கள் சுருட்டிய ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருக்கின்ற - ஒரு பெரிய ஒழுங்கமைக்கப்பட்ட தலைமுறையே தென்னிலங்கையில் தனித்துத் தலையெடுத்து எழுந்து நிற்கின்றது.

விடுதலைப் போருக்காக ஆயுதங்களை சுவீகரித்த பல இயக்கங்கள், குழுக்கள் தமிழர் மத்தியில் இருந்தன. அவைபலவும் செயலிழந்து அடங்க, தமிழர்கள் இன்று ஓரணியில் திரண்டு நிற்கின்றார்கள்.

ஆயுதம் தாங்கிய - ஆயுதமே கதி மோட்சம் என்று வாழத் தலைப்பட்ட - பல குழுக்களையும், இயக்கங்களையும் அணிகளையும் கொண்டிருந்த தமிழர் மத்தியில் இன்று இத்தகைய பாதாளக் குழுக்கள் இல்லை. இருந்தாலும் அவற்றின் வீரியம் அதிகம் இல்லை.

அங்கிங்கென, அரச இராணுவ ஆதரவுக் குழுக்கள் - அரச உளவு அமைப்புக்களின் கைக்கூலிகள் - இயங்கினாலும் அவையும் உருப்படியான பலத்தில் இல்லை.

ஆனால், தமிழரை அடக்குவதற்காக ஆயுதங்களை - இராணுவ பலத்தை - அளவுக்கு மீறி நாடிய தென்னிலங்கை, அந்தத் தவறுக்கு விலை செலுத்தும் பரிதாபத்தில் தவிக்கின்றது.

விதைத்ததை அறுப்பதைத் தவிர வேறு என்னவழி...?

# ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள்; விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளன

யாழ்ப்பாணம்,நவ.23

ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கல்வியமைச்சருடன் நடத்திய சந்திப்புக்களையடுத்து ஆசிரியர்களுக்கான விசேட ஊக்குவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பை அடுத்து நிறைவேற்றப்படவுள்ள விசேட திட்டங்கள் வருமாறு:-

★ கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிப்போருக்கு மாதாந்த ஊக்குவிப்புப் பணமாக ஆயிரத்து 500 ரூபாவும், அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிற்போருக்கு மாதாந்த ஊக்குவிப்புப் பணமாக 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

★ ஆசிரியர் சேவை தரம் I இற்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான பரீட்சைகள் நடைபெறாத காரணத்தால் பதவி உயர்வுக்குக் காத்திருக்கும் ஆசிரியர்களுக்கு சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு வழங்குதல்.

★ நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளிலுள்ள 16 ஆயிரத்து 642 ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் நிரப்புதல்.

★ மூன்று வருடங்கள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்குதல்.

★ பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பலவித பதவி உயர்வுத் திட்டங்களை உருவாக்குதல்.

★ எதிர்காலத்தில் ஆசிரியர் விடுதிக்குப் பதிலாக ஆசிரியர் கிராமங்களை நவீன வசதிகளுடன் ஏற்படுத்துதல்.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் கல்வியமைச்சுடன் இதுவரை மேற்கொண்ட 20 சந்திப்புக்களையடுத்தே இவ்விசேட திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.(10-204)

## வல்வைச் சம்பவங்கள் போன்று

# தமிழர்கள் மீது தாக்குதல் தொடர்ந்து நடந்தால் அரசு பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

## எச்சரிக்கிறார் கனகரத்தினம் எம்.பி.

யாழ்ப்பாணம்,நவ.23

வல்வையில் நடத்தப்பட்ட படுகொலைச் சம்பவங்கள் போன்று தமிழர்கள் மீது தாக்குதல்கள் தொடர்ந்தால் அரசு பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான க.கனகரத்தினம்.

நாடாளுமன்றில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:-

சிங்கள இராணுவம் தமிழர்களைத் தொடர்ந்தும் இம்சித்துவருகிறது. இச்செயற்பாட்டுக்கு நாம் ஒருபோதும் இடம் கொடுக்கலாகாது.

வல்வையிலே, இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இச்செயலைக் கண்டித்து வடக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்கொலைகளைப் புரிந்தவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன்நிறுத்துமாறு கோரி ஊர்வலம் சென்ற பொதுமக்கள் மீது சிங்கள இராணுவம காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளது.

இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். தொடர்ந்தும் இவ்வாறு தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் பாரிய விளைவுகளை எதிர்நோக்கவேண்டிவரும் - என்றார்.

(8-204)





விவாதப் போட்டியில் வெற்றியீட்டிய அணியைச் சேர்ந்த ஒருவருக்கும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கும் பரிசில்கள் வழங்கும்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# மாவீரர் நினைவு விவாதப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.23

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் மாவீரர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விவாதச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்லைக்கழக அணி முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் நேற்றுமுன்தினம் சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் பயகீரதன் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

முதல் மாவீரன் லெப்.சங்கரின் திருவுருவப்படத்திற்கு கலாநிதி ப.புஸ்பரட்ணமும் முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கு கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் பிரபாகரனும் மலர்மாலை அணிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழர்களின் இருப்பை அழித்தொழிப்பதில் விஞ்சிநிற்பது ஜே.ஆர்.ஜயவர்த்தனவா? சந்திரிகாவா? என்ற தலைப்பில் இடம்பெற்ற விவாதச் சுற்று இறுதிப்போட்டியில், சந்திரிகாவே என வாதிட்ட யாழ்.பல்கலைக் கழக அணியினர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அணியினரைத் தோற்கடித்தனர்.

இதனைத் தொடர்ந்து தலைவரின் சிந்தனைகள் அடங்கிய கைநூல் வெளியிடப்பட்டது. நூலின் முதல் பிரதியை யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் வெளியிட்டு வைக்க பேராசிரியர் சு.மோகனதாஸ் பெற்றுக்கொண்டார். அடுத்து மாவீரர்நாள் நினைவாக வெளியிடப்பட்ட கவிதை ஒலிப்பேழையை நல்லூர் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் வெளியிட்டு வைக்க கலாநிதி ப.புஸ்பரட்ணம் பெற்றுக்கொண்டார்.

அடுத்து தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தைமுன்னிட்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வறிய மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இவற்றைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் வழங்கினர்.

விவாதச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் வழங்கினர். (10-5)

## உதயவாக்கு

தன் அறிவைக்கொண்டு வளர வேண்டியவன் பிறரை நம்பியிருந்தால் அவலம்தான்.

## நாளை

கார்த்திகை 09
புதன்கிழமை
(24.11.2004)
திதி: திரயோதசி
முன்னிரவு 11.39 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
முன்னிரவு 09.13
பிரதோச விரதம்
சுபநேரம் : [illegible] - 06.12
ராகுகாலம் : 12.12 - 01.42
(பழைய நேரப்படி)

# போற்றப்படவேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாள்களில் மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்விற்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து இந்த மண்ணுக்கே உரமாகிவிட்டவர்களினதும் எமது மூச்சுடன் கலந்துவிட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்படமுடியாதவையாகும். புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவுகூர்ந்து என்றும் போற்றப்படவேண்டியவையாகும். இம்மாவீரர்களின் நினைவுகள் என்றும் எம்மை வழிநடத்தும் உந்துசக்தியாக இருக்கும். மாவீரர்களது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்துவிடாது, எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும் பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும். இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும், உணர்வுபூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டிநிற்கின்றோம்.

*(மாவீரர் வாரத்தையொட்டி இந்த ஆக்கம் வெளிவருகின்றது.)*

**- தமிழீழ மாவீரர் பணிமனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,நவ.23

வடமராட்சி லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள மருத்துவ முகாம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கரவெட்டி விகனேஸ்வரா கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தமுகாம் மருத்துவ நிபுணர்களின் அனுசரணையுடன் கழகத்தினால் மட்டும் நடத்தப்படுவதாக வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் மு.தர்மலிங்கம் தெரிவித்தார்.

லயன்ஸ் கழகமானது இன, மத, மொழி, அரசியல்சார்பற்று நலிவுற்றோருக்குச் சேவை செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு சர்வதேச சேவை நிறுவனமாகும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சைவ பரிபாலன சபையின் பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்திய பேச்சுப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு:-**

ஜெயராசா ஜெயமாருதி (கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), கணநாதன் உஷாந்தன் (யாழ்.இந்துக்கல்லூரி), அ.சிறோமி (வேம்படி மகளிர் கல்லூரி).

**மத்தியபிரிவு:-**

ஹமசினி கேதீஸ்வரக்குருக்கள் (வேம்படி மகளிர் கல்லூரி), யோ.சுதாகரன் (யூனியன் கல்லூரி), இமாஜினி வீரவாகு (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**மேற்பிரிவு:-**

புஸ்பனா பேரம்பலம் (வேம்படி மகளிர் கல்லூரி), தெய்வேந்திரம் செந்தூரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் (யாழ. இந்து மகளிர் கல்லூரி), வி.மதிவதனி (கிளிநொச்சி இந்துமகாவித்தியாலயம்).

எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள ஆறுமுகநாவலர் குருபூசை விழாவில் பரிசில்கள் வழங்கப்படும். (3)

# சாயி சேவா நிலையங்களில் இன்று பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம்,நவ.23

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 79 ஆவது பிறந்ததினம் இன்றாகும். இதனையொட்டி உலகெங்கும் உள்ள சாயிசமித்திகளில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

யாழ். பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் இன்று அதிகாலை தொடக்கம் மாலை வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சபா.ஜெயராஜா, வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் -

பஜனை, சிறுவர் நிகழ்ச்சிகள், தையல்பயிற்சியில் சித்தியடைந்த மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் ஆகியனவும் இடம் பெறும்.

நண்பகல் மதியபோசனமும் வழங்கப்படும். (ஐ)

# புதிய நிர்வாக உத்தியோகத்தர் நியமனம்

கோப்பாய், நவ.23

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு புதிய நிர்வாக உத்தியோகத்தராக சு.மகேந்திரன் கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை பிரதேச செயலகத்தில் பதவிநிலை உததியோகத்தராக இவர் முன்னர் கடமையாற்றி வந்தார். (3-72)


## மாபெரும் புத்தக விற்பனை

(நவம்பர் 22 முதல் 30 வரை)

நீண்டகாலமாக நீங்கள் எதிர்பார்த்திருந்த அரிய நூல்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், கல்விக் கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் அனைத்திற்கும் பயன்தரும் புத்தம் புதிய நூல்கள் அனைத்தும் தாமதமின்றி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வருட இறுதியில் வரும் வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்.

உங்கள் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 -222 2573.

(சி-39010) (26-16-18-42)



## நெஞ்சை விட்டகலா நீங்காத நினைவலைகள்

**2ஆம் ஆண்டு** **13ஆம் ஆண்டு**

தாயின் மடியில் 06 - 10 - 1919



தாயாரின் அடியில் 17 - 11 - 2002

தாயின் மடியில் 22 - 07 - 1936



தாயாரின் அடியில் 22 - 07 - 1991

**அமரர் சின்னத்தம்பி இராசையா**

(ஓய்பெற்ற ஆசிரியர், சாவ. இந்துக்கல்லூரி)

திதி: பூர்வபக்க துவாதசி

**திருமதி இராசசிரோன்மணி இராசையா**

திதி: பூர்வபக்க திரயோதசி

கடமையே கண்களாய்க் கொண்டு
எமையெல்லாம் உயர்நிலையில்
வாழவைத்த ஆருயிர்த் தந்தையே!
பணிவின் இருப்பிடமாய் பாசத்தின் சிகரமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் - இங்கு
மிளிர்ந்திட்ட எம் அன்னையே!
எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து
ஆண்டுகள் பல உருண்டோடினாலும்
எம் நெஞ்சக் கமலத்தில் உமையிருத்தி,

*மட்டுவில் கிழக்கு புதரன் கேணி மாகாளித் தாயாரையும், சரசாலை தெற்கு இராமாவில் பிள்ளையாரையும் ஆத்மசந்திக்காய் வேண்டி நிற்கிறோம்.*

நெஞ்சம் மறவாத உங்கள் நினைவுகளுடன்:

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"அம்பாள் அகம்",
சரசாலை மத்தி, சாவகச்சேரி.

(38850)(26-16-18-42)



## வாங்குங்கள்

# DSI

## மோட்டார் சைக்கிள் டயர்கள்

## வெல்லுங்கள்

**10** புதிய ரக

**SUZUKI EN 125**

மோட்டார் சைக்கிள்கள்,

மற்றும் **100** ஓட்டுநர் மேலங்கிகளை!



DSI மோட்டார் சைக்கிள் டயர்களை வாங்குங்கள். அதன்மூலம் 10 புதிய ரக சுசூகி EN 125 மோட்டார் சைக்கிள்களை வெல்லுவதற்கான சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள். அத்துடன் வேறும் பல தரம்மிக்க 100 ஓட்டுநர் மேலங்கிகளை ஆறுதல் பரிசில்களாக வென்றெடுங்கள்.

நீங்கள் ஒரு **DSI** மோட்டார் சைக்கிள் டயரினை வாங்கும்போது, அதனது உத்தரவாத அட்டையை நிரப்பி, கீழ்வரும் முகவரிக்கு தபாலில் இடுவதன் மூலம், இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறுவீர்கள்.

**DSI** இலங்கையின் முன்னணி மோட்டார் சைக்கிள் ரயர், எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

DSI 20 ஆண்டுகளில்

இச் சலுகை 2005 ஏப்ரல் 15 வரை மட்டுமே செல்லுபடியாகும்

உங்கள் வியாபாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நிபந்தனைகள் - ■ சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிம்டெற் ஊழியர்களுக்கும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கும் இது ஏற்புடையதல்ல ■ வெற்றி பெறுபவர்கள் தமது அடையாளத்திற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

**அகன்ற பல வகை, தரம்மிக்க மோட்டார் சைக்கிள் டயர்களிலிருந்து தெரிவு செய்யுங்கள்.**

ISO 9001-2000 சான்றுப்படுத்தப்பட்டது.

சாம்சன் றபர் இண்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிற்றெட்
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை
Tel: (011)2 926065, (011)4 816442
Fax: (011)2 925064, (011)4 816440
E-mail: dsityre@dsityre.lk www.dsityre.com

CREATIVE SERVICES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வடிவில் கடவுள்



**பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அவதார தினத்தை முன்னிட்டு பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தின் சேவைப்பகுதியினர் வெளியிட்ட கட்டுரை இது.**

- **ஏன்** மனித வடிவில் கடவுள் அவதாரம் நிகழ்கின்றது?
- கடவுள் அவதாரம் எடுப்பதற்கு என்ன காரணம்?
- உலகில் எத்தனை கடவுள்?
- சாயிபாபா யார்?

ஏன் மனித வடிவில் கடவுள் அவதாரம் நிகழ்கின்றது?

உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார் ஒரு மிருகத்தைப் பிடிக்கவேண்டுமானால் மிருகத்தைப் போல வேடமிட்டால் இலகுவாக அந்த மிருகத்தைப் பிடிக்கலாம். கடவுள் நீங்கள் எண்ணியிருக்கும் பல கைகள், பல தலைகளுடன் காட்சி தந்தால் எல்லோரும் அஞ்சி ஓடுவார்கள் அல்லது பிடித்துச்சென்று நூதன சாலையில் காட்சிப்பொருளாய் வைத்து விடுவார்கள். எனவே, மனிதரூபம் தாங்கிவந்தால் ஒழிய மனிதர்களுடன் இலகுவாகப் பழக முடியாது. நண்பனாக வரும்பொழுது எல்லா ரகசியங்களையும் சொல்லலாம். சுந்தரமூர்த்தி நாயனாரிடம் சிவபெருமான் கூறுகிறார் "தோழனாக என்னுடன் பழகு" அவரைத் தடுத்து ஆட்கொள்ள மனிதவடிவில் வயோதிபனாக வருகினறார். எனவே, மனித வடிவில் இறைவன அவதாரம் நிகழ்கின்றது. 'இராமர், கிருஸ்ணர், இயேசுகிறிஸ்து இவர்கள் எல்லாம் மனித வடிவத்திலே மனிதர்களுடன் நடமாடினார்கள்.

கடவுள் அவதாரம் எடுப்பதற்கு என்ன காரணம்?

கீதையில் கண்ணன் கூறுகின்றார். "நல்லவர்களைக் காப்பதற்கும் தீயவர்களை அழிப்பதற்கும் கடவுள் அவதாரம் எடுக்கின்றார்" (தீய குணங்களை அழிப்பது). பகவான் பாபா கூறுகின்றார் - "இராம, கிருஸ்ண அவதாரங்களின் போது தீயவர்கள் குறைவாகவும், நல்லவர்கள் கூடுதலாகவும் இருந்தபடியால் தீயவர்கள் அழிகக்கப்பட்டார்கள். ஆனால், தற்பொழுது நல்லவர்கள் குறைவாகவும், தீயவர்கள் மிக அதிகமாகவும் இருப்பதாலும் அழிப்பதற்குப் பதிலாக எல்லோரையும் நல்வழிப்படுத்தி நேர்ப் பாதையில் அழைத்துச்செல்லவே நான் வந்துள்ளேன்". நல்லவர்கள், தீயவர்கள் நன்மைக்காகவே கடவுள் மனித ரூபத்தில் அவதாரம் எடுக்கின்றார்.

உலகில் எத்தனை கடவுள்?

ஒரு நீளப் போத்தல், ஒரு கட்டைப் போத்தல், ஒரு வட்டப்போத்தல், ஒரு சதுரப் போத்தல் அவற்றை எடுத்துச்சென்று கடல்நீரை அள்ளி நிரப்பினால் ஒரே கடல்நீர் பல ரூபத்தில் காட்சியளிக்கின்றது. இங்கு வெளிப்போத்தலின உருவம் வேறு வேறு. ஆனால், உள்ளே இருக்கும் கடல்நீர் ஒன்றே. ஒரு மனிதனுக்கு பெற்றோர் இட்ட பெயர் சொக்கன். இந்தச் சொக்கனை பெற்றோர்கள் மகனே என்று அழைப்பார்கள், தம்பி, அண்ணா என்று அழைப்பான், நண்பன் "டே மச்சான்" என்று அழைப்பான், சொக்கனின் மனைவி அத்தான் என்று அழைப்பாள், மகன், அப்பா என்று அழைப்பான். ஒரு சொக்கனுக்கு எத்தனை பெயர். ஒரு மலை உச்சியை அடைவதற்குப் பல பாதைகள் உண்டு. பல பாதைகளாலும் பலவிதப்பட்ட மனிதர்கள் மலை உச்சிக்குச் செல்வார்கள். ஒரு பாதையால் செல்பவன் தான் செல்லும் பாதைதான் மலை உச்சியை அடையும் என்பான். ஆனால், உச்சியை அடைந்தவனுக்குத் தான் தெரியும், எல்லாப் பாதைகளும் மலை உச்சியைதான் அடைகின்றன என்று. இதேபோல், ஆத்மீக உச்சியை அடைந்தவனுக்குத் தான் தெரியும் எல்லா மதங்களும் ஒரே கடவுளை அடைகின்றன என்று. அரைகுறைப் பாதையில் நின்று தள்ளாடுபவர்கள் எனது மதம், எனது கடவுள்பெரிது என்று வீண்வாதம் செய்வார்கள். ஒரே ஒரு கடவுள் தான் இவ்வுலகைப் படைத்து வழிநடத்துகின்றார். எல்லாப் பெயர்களும் ஒரே கடவுளின் பெயர்தான். எவரும் மதம் மாறவேண்டிய அவசியம் இல்லை.

### சாயிபாபா யார்?

சாயிபாபா - இந்தியாவில், புட்டபர்த்தி என்னும் கிராமத்தில் 1926 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி வெங்கப்பராஜுவுக்கும் - ஈஸ்வரம்மாவுக்கும் மகனாகத் திரு அவதாரம்செய்தார். தாயின் வயிற்றில் கருவாவதற்கு முன்பு அன்னை ஈஸ்வரம்மா கிணற்றடியில் சூரியநமஸ்காரம் செய்யும்பொழுது ஆகாயத்தில் இருந்து ஒருஜோதி வயிற்றில் புகுந்தது.

அந்த ஜோதியே சாயிபாபா. இவரின் பிள்ளைத் திருநாமம் சத்தியநாராயண ராஜு. பிறந்த குழந்தையின் தலையைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் காணப்பட்டது. குழந்தை பிறப்பதற்கு முன்பும் வீட்டில் பல அற்புதங்கள் நடைபெற்றன. வீட்டில் உள்ள வாத்தியங்கள் தாமாகவே இசை ஒலி எழுப்பின.

குழந்தை சத்தியா அந்த ஊருக்குச் செல்லக் குழந்தையாக வளர்ந்து பள்ளிப்பருவத்தை அடைந்தான். பாடசாலையில் வித்தியாசமான மாணவன். எல்லாச் சிறுவர்களையும், ஆசிரியர்களையும் அதிசயசக்தியால் கவர்ந்து இழுத்தான். பள்ளித் தோழர்களுக்கு பென்சில், இனிப்பு வகைகள், பழவகைகள், கற்கண்டு, விபூதி போன்றவற்றைத் தனது கை அசைவால் உருவாக்கிக்கொடுப்பான். பாடசாலையில் திறமைமிக்க மாணவன்.

14 வயதில் பள்ளிப்படிப்பை நிறுத்தி வீட்டில் இருந்து வெளியே வந்து உலகமே எனது வீடு, அனைத்து மக்களுக்கும் வழிகாட்டவே நான் வந்துள்ளேன் என்று - கூறினார். வழிதவறிய மக்களை நேர்ப்பாதையில் அழைத்துச் செல்லவும், வறண்ட இதயங்களில் அன்பு எனும் நீரைப் பாய்ச்சவும் நான் வந்துள்ளேன். உலகில் உள்ளது ஒரே மதம் - அது அன்பென்னும் மதம், உலகிலுள்ளது ஒரே இனம் - அது மனித இனம். உலகிலுள்ளது ஒரே மொழி - அது இதயமொழி, உலகிலுள்ளது ஒரே கடவுள் -

## பாபாவின் அவதாரதினம் இன்று

அவர் எங்கும் நிறைந்தவர். இதுவே பாபாவின் தாரக மந்திரம். அன்பான சேவை மனித குலத்திற்குத் தேவை. ஒவ்வொரு மனிதனும் கடவுளின் அம்சம்.

எனவே, எல்லோரிடத்தும் அன்புவை, எல்லோருக்கும் சேவை செய் என்று கூறுகின்றார் பாபா.

முன்னுதாரணமாக மிகவும் பின்தங்கிய புட்டபர்த்திக் கிராமத்தை உலக நாடுகளின் ஆத்மீகத் தலைநகரமாக மாற்றியுள்ளார். உலக நாடுகளிலிருந்து அமைதிதேடி லட்சக்கணக்கான மக்கள் பாபாவைத் தரிசிக்கத் திரண்ட வண்ணம் உள்ளார்கள். மனித மேம்பாடுகளுடன் பல்கலைக்கழகங்கள், அதிநவீன வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகள். இந்தியாவின் பல கிராமங்களுக்குக் குடிதண்ணீர்த் திட்டம் எல்லாமே இலவசமாக சாயிபாபாவால் செயல் முறைப்படுத்தப்படுகின்றன.

14 வயதில் வீட்டை விட்டு வெளியே வந்த சாயி, ஆரம்பத்தில் பக்தர்களால் ஒரு கொட்டகை அமைக்கப்பெற்று, அதிலே பிரார்த்தனைகள் நடைபெற்றன. அன்றும் பொறாமை கொண்ட சிலபேர் கொட்டகைக்குத் தீ மூட்டினார்கள். திடீரெனக் கொட்டகைக்கு மட்டும் மழைபெய்து தீயை அணைத்தது. தீ வைத்தவர்கள் பாபாவின் காலில் விழுந்து வணங்கினார்கள். நஞ்சூட்டிய வடையைக் கொடுத்து கொல்லமுயன்றார்கள். எதுவும் அவதாரத்தின் முன்பு அசைக்கமுடியவில்லை. அதேபோல் இன்றும் சிலர் பெருமளவில் பணத்தைக் கொட்டி சிலரை விலைக்கு வாங்கி ஏதோ ஏதோ செய்கிறார்கள். எதுவும் சத்தியத்தை அசைக்க முடியாது. முன்பு இயேசு கிறிஸ்துவையும் பல அவதூறுகள் கூறிச் சிலுவையில் அறைந்தார்கள். மீண்டும் உயிர்த்தெழுந்தார் இயேசு கிறிஸ்து. எனது அவதாரப்பணியை எவராலும் தடுக்கமுடியாது என்று கூறுகின்றார் பாபா.

2005ஆம் ஆண்டு பாபாவின் 80 ஆவது அவதார தினம் இப்பொழுதே உலகமெங்கும் பல சேவைப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதோ பாபாவின் விசேஷ அன்புச் செய்தி. அன்புடன் சேவை செய்யுங்கள், அன்புடன் சேவை செய்வதே தவம். முழுநேரப் பக்தனாக இரு. பகுதிநேர பக்தனாக உன்னை ஆக்கிக் கொள்ளாதே?, உலகியல் கல்வியையும், ஆன்மீகக் கல்வியையும் இணைப்பதே ஸ்வாமியின் சங்கற்பம். சேவை உங்களை ஆன்மீக வழியில் வழிநடத்தும் சேவை யாருக்கு? உங்களை ஈடேற்ற சேவை செய்கின்ற தொகையில் அல்ல. சேவை எந்த மனத்துடன் செய்கின்றாய் என்பதைப் பொறுத்தே உள்ளது. சேவைக்கு நேரம், காலம் கிடையாது. எந்தநேரமும் சேவை. நேரம் இல்லை என்று சொல்பவர்கள் பலபேர். சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனப்பூர்வமாக உண்டானால் நேரம் தானாக அமையும். அன்புடனும் இதயசுத்தியுடனும் நீங்கள் சேவையில் ஈடுபடும்பொழுது உங்கள் சொந்தவேலைகளின் சுமை குறைக்கப்படுகின்றது. உஙகள் சுமையை ஆனந்தமாக சுவாமி சுமக்கிறார். உங்களுக்கு சேவைசெய்ய ஸ்வாமி தயாராக இருக்கின்றார். மற்றவர்களைப் பற்றி வீண் கதை கதைப்பதில் செலவழிக்கும் நேரம் எவ்வளவு? நீங்கள் செய்யாவிட்டாலும் செய்கின்றவர்களைக் குற்றம் சுமத்தாதீர்கள். நீங்கள் நினைக்கும் எண்ணங்கள் உடனேயே என்னிடம் வருகின்றன.

நல்லதை நினைத்தால் நல்லது செய்ய, நல்லநேரம் நிறையவரும். சுவாமியின் பெயரில் செய்யப்படும் ஒவ்வொரு சேவையிலும், பஜனையிலும் சுவாமி அருகில் இருக்கின்றார். சுவாமியின் அனுமதியுடனே எல்லாம் நடக்கிறது.

- ஓம் ஸ்ரீசாயிராம்.

### மேல்நாடு செல்லாத பாபா

இதுவரை ஆபிரிக்காவை விட எந்த நாட்டிற்கும் செல்லவில்லை. ஆனால், பாபாவின் அருட்பார்வை உலகமெங்கும் பூரணமாகப் பரவியிருக்கின்றது. அன்பெனும் அளப்பரிய சக்தியால் உலக நாட்டு மக்கள் புட்டபர்த்தி என்னும் கிராமத்தை நோக்கி விரைந்த வண்ணம் உள்ளார்கள். பாபாவை நேரடியாகக் காணாத மக்கள் பல லட்சம். கனவிலே கண்டு தரிசனம் பெற்றவர்கள் பல்லாயிரம். தூற்றிய பல பேர் தமது அறியாமையை உணர்ந்து, மனந்திருந்தி பாபாவின் ஆசிவேண்டி நிற்கிறார்கள். தூற்றியவர்களுக்கும், தூற்றித் திரிபவர்களுக்கும் அன்புக் கரங்களை நீட்டுகின்றார் பாபா. அவர்கள் அறியாமையால் செய்கின்றார்கள் சிவனை எதிர்த்தான் தக்கன், முருகனை எதிர்த்தான் சூரன், கண்ணனைப் பகைத்தான் கம்சன், இராமரை எதிர்த்தான் இராவணன். எதிர்ப்பவர்களும் இறைவனுடைய குழந்தைகளே. பல லட்சம் பணத்திற்காக மட்டும் செயற்படுபவர்களும் இருக்கின்றார்கள். பாபாவிடம் சாதி இல்லை, சமயம் இல்லை, இருப்பது ஒரே இனம். அது மனித இனம். எங்கும் நிறைந்தவர் ஒருவர் - அவரின் பொதுப்பெயர் கடவுள். நீ என்ன பெயரில் அழைத்தாலும் (இராமா, கிருஷ்ணா, இயேசு, புத்தர், அல்லா, சிவா) பதில் கொடுப்பவர் ஒரு கடவுளே. உலகத்தைப் படைத்தவர் ஒரே ஒரு கடவுளே!. இதை உணர்ந்தவன் உண்மைச் சமயத்தில் வாழ்கின்றான். ஒரே ஒரு கடவுளை எல்லாவற்றிலும், எல்லோருள்ளும் காண்பவன் யோகி, ஞானி. உலக சுகத்திற்காக சமயத்திற்கு சமயம் மாறுபவன் போகி.

# கடவுள் விசுவாசமே வலிமைமிக்கது



பக்தியை விட கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசமே வலிமைமிக்கது. அசையாத நம்பிக்கையும் கடவுளே கதி என்று சரணாகதி அடைவதுமே தூய பக்தியாகும். திறமையால் முடியாத எத்தனையோ காரியங்கள் தெய்வ நம்பிக்கையால் முடிந்திருக்கின்றன. மருத்துவர்களாலும், விஞ்ஞானத்தாலும் குணப்படுத்த முடியாத எத்தனையோ நோய்கள் நம்பிக்கையோடு இறைவனிடம்செய்த பிரார்த்தனையால் குணமாகியுள்ளன.

நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உன்மீது அன்பு செலுத்தவும், உனக்கு ஆசிகள் வழங்கவும், உனக்கு நல்லவைகளை நல்கவும் நான் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் தயாராக இருக்கின்றேன் என்கிறார் பாபா. என்னுடைய அனுக்கிரகம் சூரிய ஒளியைப் போன்றது. உயர்வு - தாழ்வு இன்றி எல்லா இடங்களிலும் சமமாக வீசக்கூடியது. உங்கள் வீட்டு ஜன்னல்களையும், கதவுகளையும் திறந்து வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது சூரிய ஒளி தடையில்லாமல் உங்கள் வீட்டின் உள்ளே விழும். **God helps those who help them selves**

தங்களுக்குத் தேவையானவற்றை தாங்களே செய்துகொள்ள முயலுகின்றவர்களுக்கு கடவுளும் உதவி செய்கிறார் என்பது அதன் பொருள். கடவுள் நம்பிக்கை இல்லாதவன் தன்மீதும் நம்பிக்கை இல்லாதவனாகத்தான் இருப்பான். நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கை இல்லாமை மரணம். தெய்வநம்பிக்கையால் தன்னம்பிக்கை வளருகின்றது. தன்னம்பிக்கையினால் மனம் திருப்தியடைகின்றது.

திருப்தியடைந்த மனதில் பொறாமை, பேராசை, கோபம் போன்றவை தோன்றுவதில்லை. அத்தகைய மனிதனிடத்தில் சுயநலம் மறைந்துவிடுகின்றது. தியாக மனப்பான்மை உருவாகின்றது. அதனால், அவன் தன்னை உணரும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு தூய தெய்வநம்பிக்கை ஒரு சாதாரண மனிதனை தன்னை உணர்ந்த தெய்வீக மனிதனாக ஆக்கிவிடுகிறது என்று பகவான் பாபா தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

நாம் ஒரு சுவரில் சாய்ந்துகொண்டு நிற்கும்பொழுது அது ஓர் ஆதாரமாகி நாம் ஸ்திர நிலையில் நிற்பதற்கு உதவுகின்றது. அது போலக் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு வாழும்போது, கவலையில்லாமல் இருக்கக் கூடிய ஒரு ஸ்திரமான மனநிலை ஏற்படுகின்றது என்று பகவான் பாபா கூறுகின்றார்.

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் வாழ்க்கைப் பாதை அவரது உபதேசங்கள், தத்துவங்கள் அனைத்துமே அன்பின் பிரதிபலிப்புத்தான். அன்பினை வெளிப்படுத்தும் ஒரு நடமாடும் தெய்வம் அவர். ஏழை, பணக்காரன், படித்தவன்,படிக்காதவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி சாதி,மதம், மொழி, இனம், நிறம், நாடு ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு அனைத்துலக ஜீவன்களும் ஒன்றென்ற தத்துவத்தில் அவர் அனைவருக்கும் தூய அன்பைப்பொழிகின்றார் பகவான் பாபா. கடலுக்கு எல்லை உண்டு அன்புக்கு எல்லை இல்லை. அன்புநிறைந்த உள்ளத்தோடு வாழுகின்ற ஏழை. அன்பில்லாத உள்ளத்தோடு வாழும் அரசனைவிட உயர்ந்தவன. கடவுளைக் காண்பதற்கு ஒரே வழி தூய அன்பும் அசையாத நம்பிக்கையுமே. இவைகளே பகவான் பாபாவின் பிறந்தநாளில் அவர் கூறும் அறிவுரைகளாகும். ★

- வி.ஆர்.சுதாகரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் ஜி.சீ.ஈ. (சா)தரம் மாதிரிப் பரீட்சைகள் இல.24

# ஜி.சீ.ஈ.[சாதாரண தர]
# மாதிரிப் பரீட்சை - 2004 32 T I


நேரம்: ஒரு மணித்தியாலம்

# கணிதம் I

தொகுப்பு: இரா.அருட்செல்வம்

01. 6 மேசைகள் வாங்குவதற்கு ஒருவர் 15,000 ரூபா பணத்தை செலவு செய்தால் ஆயின் ஒரு மேசையின் விலை யாது,?

02. சுருக்குக: (-20) - (-8) + (-2)

03. 

உருவின் சுற்றளவு 14 Cm ஆயின் a இன் பெறுமானத்தை அறிக?

04. ரூபா 2500 இன் 12½% எவ்வளவு ஆகும்?


05. 6ac - 3a + 2c - 1 என்பதனை காரணியாக்குக?

06. X = 2x2x3, Y = 3x5, Z = 2x3x3 ஆயின் X,Y,Z இன் பொ.ம.சி.யாது?

07. 0.25 X 0.5 = 0.125 ஆயின் 0.025 X 5 இன் பெறுமானம் யாது?

08. $\left(\frac{2}{5} - \frac{1}{4}\right) \times \frac{2}{3}$ சுருக்குக?

09. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக்கோணம் 150° ஆயின் பக்க எண்ணிக்கை யாது?

10. 

உருவில் X இன் பெறுமானம் யாது?


11. $\frac{3}{2a} + \frac{5}{3a} - \frac{1}{a}$ சுருக்குக.

12. $1023_{நா}$ என்பதனை தசம எண்ணாகத் தருக?

13. $2^{X-1} = 7+3^0$ இல் X இன் பெறுமானத்தை அறிக?

14. ஒரு தந்திக் கட்டண அறவீட்டில் முதல் 10 சொற்களுக்கு ரூபா 20உம் அடுத்து 10 சொற்களுக்கு சொல் ஒன்றிற்கு 3 ரூபாவும் அறவிட்டால் 18 சொற்கள் கொண்ட ஒரு தந்திக்காக அறவிடப்படும் கட்டணம் எவ்வளவு?


15. S = n/2 {a + l} என்ற சமன்பாட்டில் l ஐ ஏனைய உறுப்புக்களின் சார்பில் எடுத்துரைக்க

16. 


உருவில் கோடு AB ஆனது உற்பத்தியூடாக செல்கிறது. AB யின் பொருத்தமான சமன்பாட்டை எழுதுக?

17. lg 5 = 0.6990 ஆயின் lg 2 இன் பெறுமானத்தைக் காண்க?

18. 20, 30, 50, 50, 60, 60, 70, 80, 90, 90 என்ற பரம்பலில்
I. ஆகாரம்
II. இடையம் என்பவற்றைக் காண்க?


19. 

உருவில் அரியம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அதன் குறுக்கு வெட்டு செங்கோண முக்கோண உருவமாகும். இவ்வுருவின்,
1. குறுக்கு வெட்டுப் பரப்பு யாது,?
2. கன அளவு யாது?

20. 

உருவில் ABC என்ற முக்கோணியில் PQ//BC ஆகும்.
1. உருவில் பொருத்தமான இரு இயல் பொத்த முக்கோணிகளைத் தருக?
2. AP/AB இற்கு பொருத்தமான இரு விகிதங்களைத் தருக?


21. பொருள் ஒன்றின் விற்பனையில் குறித்த விலையில் 15 % கழிவு கொடுத்து விற்கப்பட்டது. பொருளின் குறித்த விலை 800/- ஆகும்.
1. கொடுத்த கழிவு எவ்வளவு?
2. விற்ற விலை எவ்வளவு?

22. 


O என்னும் நிலையத்திலிருந்து புள்ளிகள் A,B என்பவற்றின் இரு நிலைகள் காட்டப்பட்டுள்ளது.
1. புள்ளி A யின் திசைகோள் யாது?
2. புள்ளி B யின் திசைகோள் யாது?

23. 3a - 2b = 7, a + 6b = 5 ஆயின் a,b இன் பெறுமானங்களை கணிக்காது a + b இன் பெறுமானத்தை அறிக?

24. A,B,C என்ற மூன்று மாணவர்கள் மூன்று பரீட்சைகளின் முறையே 7/20, 15/40, 2/30 என்றவாறு சரிகளைப் பெற்றனர். இவர்களின் திறமையான மாணவன் யாராக இருப்பான்? காரணம் தருக?.

25. 

A,B,C,D,E என்ற ஐந்து மாணவர்கள் சேமித்த பணவிவரம் வட்ட வரைபு ஒன்றில் காட்டப்படுகின்றது. E யிலும் பார்க்க C என்பவன 400 ரூபா கூடுதலாகச் சேமித்தானாயின் எல்லோருடைய மொத்தச் சேமிப்பு எவ்வளவு ஆகும்.


26. 

உருவில் நிழற்றிய பகுதியின் பரப்பு, சுற்றளவு காண்க?

27. 3, 6, 12, ............................ என்ற பெருக்கல் தொடரைக் கருதுதல் கொண்டு தொடரின் பொதுவிகிதம், 10ஆம் உறுப்பு காண்க?
பொது விகிதம் :-
10ஆம்உறுப்பு :-

28. A,B இரு நிலையான புள்ளிகள் C மாறும் ஒரு புள்ளியாகும். ACB = 90° ஆகுமாறு C இன் ஒழுக்கை வரையறுக்க. அமைப்பை வரைந்து காட்டுக. (AB = 6 Cm எனக் கொள்க).

29. $\text{Sin } A = \frac{h}{120}$ ஆகும். Sin A = 0.8660 எனக் கொண்டு h இன் பெறுமானத்தை அறிக.

30. 

உருவில் AC தொடலியாகும். Δ BD ஒரு வெட்டியாகும்.
$B\hat{A}C = 40^\circ$
O வட்டத்தின் மையமாகும்.
பின்வருவனவற்றைக் கணிக்க
I. $A\hat{D}B$
II. $A\hat{O}B$.
III. $O\hat{A}B$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை மேலாதிக்கம் இருக்கும்வரை தமிழ்த்தேசிய கோரிக்கையும் சட்ட பூர்வமானதே

**தென்னாசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் பிராந்திய மாநாடு இம்மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் வி.ரி.தமிழ்மாறன் ஆற்றிய உரையின் முதல் பகுதி 14.11.2004 இல் பிரசுரமாகியிருந்தது. இரண்டாம் பகுதி இன்று வெளியாகின்றது.**

### சவால்தரும் ஆலோசனைகள்

அரை நூற்றாண்டுக்குமேலாக திணறிக்கொண்டிருக்கும் எண்ணிக்கையில் பெரும்பான்மை (Quantitative majority) நிலையிலிருந்து குணத்தளவில் பெரும்பான்மை (Quantitative majority)என்ற ஜனநாயகப பண்புகளுக்கு உட்படுத்திக்கொள்ள இலங்கை தன்னை விட்டுக்கொடுக்குமா? சமஷ்டி ஆட்சி இன்னமும் இங்கு சாத்தியந்தானா?, சமஷ்டியானது நாட்டின் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்கின்ற பீதி உண்மையானதா? ஆரம்பகாலத்திலிருநதே இலங்கை ஒரே தேசிய அரசாக இருந்து வந்துள்ளதா? இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமான ஒரு பொது அடையாளத்தை உருவாக்குவது சாத்தியமா?

இந்தக்கேள்விகள் அனைத்துக்குமான விடை நாட்டின் ஒரே ஒரு குணத்தில்தான் தங்கியுள்ளது. அதாவது, நாடானது தன்னைத் தானே சீர் அமைத்துக்கொள்ளும் இயல்பான திறமையைப் பெற்றிருப்பதாகும். பிணக்குகளுக்கு தீர்வுகாணும் எந்தவொரு விவாதத்திலும் இந்த விடயமே பெரும்பாலும் அதிகமான இடத்தைப் பிடித்துவிடுகின்றது.

இலங்கை தேசத்தை சீர் அமைப்பதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டிய விடயங்கள் என்ன?

நாட்டை சீரமைப்பதென்பது, ஒவ்வொரு தனியான பிரச்சினைகளதும் சிக்கல்தன்மை, இடைஞ்சல்கள் போன்றவற்றுக்கு ஏற்றவாறு மாறுபடலாம். பன்மைத்துவ சமூகங்களின் தனித்துவப் பண்புகளினால் இம்மாதிரி நிலைமைகளில் பெரும் கஷ்டங்கள் எதிர்நோக்கப் படுகின்றன.

நாட்டின் தன்மை ஒரேசீராக இல்லாத நிலைகளில், நடைமுறைச் செயற்பாடுகளை பாரம்பரியமான எல்லைகளுக்குள் அல்லது அதிகார மட்டங்களின் வகுக்கப்பட்ட கட்டங்களுக்குள் அடக்கிவிடுவதானது யதார்த்தமாகவோ பயனுள்ளதாகவோ இருக்கமாட்டாது.

இலங்கை போன்ற பன்மைத்துவ சமூக அமைப்பில் மக்கள் குழுமங்கள் ஒவ்வொன்

**வி.ரி.தமிழ்மாறன்**

றும் தனது தனித்துவ அடையாளம் தொடர்பாக விழிப்படைந்திருக்கும்போது - ஒரு சமூகத்தை ஒரே எல்லைக்குள் வாழும்படி கட்டாயப்படுத்துவதானது அடிப்படையில் அரசின் அதிகாரக் கட்டுக்கோப்புக்கு ஆபத்து ஏற்படுத்தும். இது, அதற்குள் வாழ்கின்ற மக்களின் வாழ்வின்பால் கவனம் செலுத்தப்படுவதையும் கட்டுப்படுத்துவதையும் தவிர்க்கமுடியாததாகிவிடும். பல்வேறு இனங்களை - சிலசமயம் பகைமைகொண்ட மக்களை உள்ளடக்கிய அரசில், கவனம் செலுத்துதல், கட்டுப்படுத்துதல் என்ற வாசகத்துக்கு 'யார் யாரை ஆள்வது' என்ற வகையில் கருத்து கொள்ளவேண்டும்.

### நாணயத்தின் இரு பக்கம்

ஜனநாயகம் என்பதும் பன்மைத்துவம் எனபதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இருப்பதால், என்னைப் பொறுத்தவரை, பங்கேற்கும் அல்லது சட்டவல்லுநர்கள் கூறுவது போல் - அது அரசியல் சட்ட ஜனநாயகம் ஆகும்.

அம்சங்களைவிட அதிக முக்கியத்துவமானவை அல்ல என்று ஒருமித்த கருத்து உருவாக முடியும். இந்த வகையில்தான் எண்ணிக்கை அளவில் பெரும்பான்மையானவர்களால் அளிக்கப்படும் தீர்ப்புக்களின் பெருந்தன்மையை சிறுபான்மையோரால் - குழுமங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியம் ஏற்படும். ஒரு மக்களின் கொள்கைகள், மற்றும் அரசியல் சித்தாந்தங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்மானங்கள் எடுக்கப்படும்போது, பெரும்பான்மையானது மாற்றம் பெறக்கூடியது என்று கருதப்படமுடியும், சிறுபான்மைக்கு அடுத்த தேர்தலில் அது இடம்கொடுப்பதாக இருக்கும்.

ஆனால், நீடித்த சமபலமற்ற நிரந்தர சிறுபான்மை அல்லது பன்மைத்துவ சமூகங்களில் - அவர்கள் தமது தனித்துவத்தை அல்லது அடையாளத்தை நிலைநாட்டிக்கொள்ள ஆர்வம் கொண்டுள்ள நிலையில் - அரசானது, ஒரு தனி பெரும்பான்மை குழுவினால் அமைக்கப்பட்டது என்று கருதப்படுவதற்கு எதுவித நியாயமும் இல்லை. இங்கேதான் சட்டபூர்வத்தன்மை பற்றிய கேள்வி எழுகின்றது.

அரசு அமைக்கும் அதிகாரத்தை பெற்றுவிடும் பெரும்பான்மைக்கு சிறுபான்மை மக்கள் நிரந்தரமாக அடங்கி வாழவேண்டும் என்ற மையான விசுவாசத்தை எதிர்பார்க்கும் ஒரு அரசின் சட்டபூர்வத்தன்மையானது, அதன் பிரதிநிதித்துவ அல்லது அரசியல் சட்டத்தின் தன்மையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அதனால்தான், இலங்கை ஒருபோதும் ஒரு தேசிய அரசாக இருக்கவில்லை என்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

இலங்கை அரசானது, பெரும்பான்மை மேலாதிக்கத்துக்குரியதாக இருக்கும்வரை தமிழ்த் தேசியத்துக்கான கேள்வியும் சட்டபூர்வமானதாகவே இருந்துவரும். தேசிய கட்டுமானப் பணியிலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் சுய நிர்ணய உரிமையின் பேரால் தமது தேசத்தை சீரமைக்கும் பணியில் இறங்க விரும்புவார்கள்.

ஆலந்து தீவுகள் தொடர்பாக சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழுவொன்று வழங்கிய தீர்ப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

ஒரு தேசத்தின் ஒரு பகுதியாகவிருக்கும் சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் இன்னொரு தேசத்தில் இணைந்துகொள்வதானது, விதிவிலக்கான ஒரு தீர்வாக கருதப்படமுடியும், அரசு நியாயமான, முனைப்பான உத்தரவாதங்களைச் செயல்படுத்தமுடியாத நிலையில் இருக்கும்போது இதனை இறுதி

## தீர்வொன்றை வழங்கக்கூடிய உணர்வும் தகுதியும் யாருக்கு இருக்கின்றது?

1970 ஆம் ஆண்டு ஐ.நா. பிரகடனத்தின் 7 ஆவது பந்தியில் நாடுகளுக்கிடையில் நட்புறவுத் தொடர்புகள் பற்றிய விடயத்தில் சுய நிர்ணயத்துக்கான உரிமைகள் பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மேற்குறித்த பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள எதற்கும் (சுயநிர்ணயம் தொடர்பான பிரகடனம்);

சமவுரிமைகள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டது போன்ற மக்களின் சுயநிர்ணயம் தொடர்பான நியமங்களுக்கமைவாக செயல்பட்டு அதன்மூலம் இனம், கொள்கை அல்லது நிறப்பாகுபாடின்றி பிரதேச மக்கள் முழுமைக்குமான பிரதிநிதித்துவ அரசைக்கொண்டு இயங்கிவரும் இறைமையுள்ள சுதந்திர அரசுகளின் பிரதேச சுயநிர்ணயத்தை அல்லது அரசியல் ஒற்றுமையை முழுமையாக அல்லது பகுதியாக துண்டித்துவிடுவதற்கான சொல்களில் இறங்க ஊக்கமளிப்பதாகவோ அதிகாரமளிப்பதாகவோ பொருள்கொள்ளலானது"

ஜனநாயகமானது பன்மைத்துவ சமூகத்தில் சொல்படுவதற்கு, அங்கே, பலத்த சமுதாய உணர்வு நிலவவேண்டும். அதன்மூலம் அவர்களைப் பிரிக்கின்ற பிரச்சினைகள் இணைக்கும் நிலையில் நியாய தர்மங்களுக்கு இடமின்றி பெரும்பான்மையோரின் தீர்மானங்களே நிலை பெறுவதாகின்றன.

இலங்கை நாட்டைச் சீரமைப்பது பற்றிய விடயத்தைப் பார்ப்போம், எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் தாம் கட்டுப்பட்டு செயல்படுவதற்கு ஒப்புக்கொண்டதான ஏதாவது ஒரு ஒப்பந்தம் அல்லது சமூக இணக்கப்பாடு தொடர்பான ஏதாகிலும் ஒரு தனித்துவ ஏற்பாட்டை சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கின்றதா?

முந்திய மூன்று அரசியல் சட்டங்களும் உருவாக்கப்பட்ட நடைமுறைகளையும் அவைகளின் உள்ளடக்கங்களையும் நினைத்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். சிறுபான்மை மக்களிடம் தேசிய விசுவாசத்தை எதிர்பார்க்கும் அளவுக்கு இவை எந்த அளவுக்கு சட்டவலுவைக்கொண்டிருக்கின்றன என்பதை ஆலோசிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று இந்த நாட்டிலிருப்பது ஒரு பங்காளித்துவ அல்லது ஒரு அரசியல் திட்ட ஜனநாயகம் என்று கூறமுடியுமா?

ஒரு பன்மைத்துவ சமூகத்திலிருந்து முழு நடவடிக்கையாகக் கருதலாம்.

இன்று நம் முன்னிருக்கும் மிகப்பெரிய கேள்வி என்னவென்றால், நாட்டின் இனப்பிரச்சினைக்கு முனைப்பான தீர்வொன்றை வழங்கக்கூடிய அரசியல் உணர்வும் தகுதியும் சிறிலங்காவுக்கு இருக்கிறதா என்பதே. யார் இதை அர்ப்பணிப்போடு செய்து திறமையை வெளிப்படுத்தப் போகிறார்கள்?

தமிழர் ஐக்கிய கூட்டமைப்பின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திடம் எவ்வாறு தனிநாடு பெறப்போகிறீர்கள் ஒன்று கேட்ட போது, அவர்தனக்கே உரிய பாணியில் கூறினார்.

**தமிழாக்கம் : நந்தன்**

'நாங்கள் கொடுக்கும் உபத்திரவங்களைச் சகிக்க முடியாமல் அவர்களே எங்களைத் தூக்கி எறிந்துவிடுவார்கள்' என்று

இலங்கை தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்ள மனங்கொள்ளாவிட்டால் தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுவது நிச்சயமே.

(முற்றும்)

# இந்த அரசு ஊழியர்களுக்குக் கொடுத்தது வெறும் 350 ரூபா சம்பள உயர்வு மட்டுமே

## கணக்குச் சமர்ப்பித்தார் ஐ.தே.கட்சி எம்.பி.

70 சதவீத சம்பள உயர்வு வழங்கு வோம் என்று தம்பட்டம் அடித்த அரசு இப்பொழுது 20 வீத சம்பள உயர்வை மட்டுமே வழங்கியுள்ளது. நாட்டு மக்களை ஏமாற்றி விட்டது. உண்மையில் வெறும் 350 ரூபாவை மட்டுமே இந்த அரசு சம்பள உயர்வாக வழங்கியுள்ளது.

- இப்படிப் புள்ளிவிவரத்துடன் நாடாளுமன்றில் கணக்கு வாசித்தார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ஹேமகுமார நாணயக்கார. நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தை எதிர்க்கட்சிகளின் சார்பில் ஹேமகுமார நாணயக்கார ஆரம்பித்துவைத்துப் பேசினார்.

விவாதத்தைத் தொடர்ந்து ஹேமகுமார நாணயக்கார மேலும் கூறியதாவது:-

எங்களுடைய *(ஐ.தே.க.) அரசு, அரச ஊழியர்களுக்கு ஏற்கனவே 1,250 ரூபா சம்பள உயர்வையும், மேலதிக நேரக் கொடுப்பனவாக 900 ரூபாவையும் அறிவித்திருந்தது. இதன்மூலம் சகல அரச ஊழியர்களும் 2 ஆயிரத்து 150 ரூபா சம்பள அதிகரிப்பைப் பெறுவர். இன் றைய அரசுக்கு இந்த - எங்களுடைய 2ஆயிரத்து 150 ரூபாவுடன் 350 ரூபாவைச் சேர்த்து 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ளது. ஆக மொத்தத்தில் அரச ஊழியர்களுக்கு 350 ரூபா சம்பள உயர்வு மட்டுமே கிடைத்துள்ளது. இதுதான் உண்மை.

350 ரூபா சம்பள உயர்வை வழங்கியதுடன் அரசாங்கம் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகளையும் நீக்கிவிட்டது.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளிலும்கூட, கைவைத்துவிட்டது இந்த அரசு, சர்வதேச தொழிலாளர் சாசனத்தையும் உதாசீனப்படுத்திவிட்டது.

எட்டுமணிநேர வேலைக்காக சிக்காக்கோ நகரில் உயிர்த் தியாகஞ்செய்து நடத்திய உரிமைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்திவிட்டது இந்த அரசு.

முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க மேதினத்தை சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்தினார்.

ஆனால், அவரது மகள் தலைமையிலான இந்த அரசோ தொழிலாளர்களின் வேலை நேரத்தை 9 மணிநேரமாக அதிகரித்துவிட்டது. மேலதிக நேரக்கொடுப்பனவுகளை வெட்டி, 350 ரூபா சம்பள அதிகரிப்பை மட்டும் வழங்கிவிட்டது. 40 வீத சம்பள உயர்வு வழங்கிவிட்டோமென்று பம்மாத்து காட்டுகின்றது இந்த அரசு.

சிவப்புச்சட்டை போட்டுக்கொண்டு தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்தியே தலைமுடியை எல்லாம் இழந்த அமைச்சர் டி.யூ.குணசேரவும், ஜே.வி.பி. வீரர்களும் இப்போது வாயை மூடிக்கொண்டிருப்பது ஏன்?

உள்ளூர் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கியதாகக் கூறிக்கொண்டு விவசாயிகளின் வயிற்றில் அடித்துவிட்டது இந்த அரசு.

அரிசி, பருப்பு, மிளகாய், வெங்காயம், சீனி, கருவாடு என்பன உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுபவை. பல லட்சம் குடும்பங்கள் இந்த விவசாயத்தை நம்பி வாழ்கின்றன.

ஆனால், அரசோ இவற்றிக்கான இறக்குமதி வரியைக் குறைத்துவிட்டது. இதனால், வெளிநாட்டுப் பொருள்கள் இங்கு வந்து குவியும். உள்ளூர் உற்பத்திகள் அடியோடு முடக்கப்பட்டுவிடும். விவசாயிகளுக்கு இது ஒரு பலத்த அடியாகும்.

அதேவேளை, அப்பிள் பழத்திற்கும் திராட்சைப் பழத்திற்கும் வரி அதிகரித்துள்ளது. இவற்றின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படுகின்றது. இவை இலங்கையில் உற்பத்தி செய்யப்படுபவையா?

பொருளாதார அறிவு சிறிதும் இல்லாத ஜே.வி.பியினரும் ஸ்ரீல.சு.கட்சியினரும் வரி மன்னிப்புச் சட்டத்தை நீக்கிவிட்டால் 21 ஆயிரம் கோடி ரூபாவைப் பெறமுடியும் என்று வீரம் பேசினர். ஆனால், நிதியமைச்சர் 3 கோடிரூபாவைக் கூட பெறமுடியவில்லை என்கின்றார்.

செலவினங்களைக் குறைக்கவேண்டும் என்ற ஜே.வி.பியினர் கூச்சல்போட்டனர். இப்பொழுது அமைச்சரவையின் 87 பேர் அமைச்சர்களாகவிருக்கின்றனர். சகல சுகபோகங்களையும் அனுபவிக்கின்றனர். ஆனால், எங்களுடைய ஆட்சியில் பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பளத்தை மட்டுமே பெற்றனர் என்பது எல்லோரும் அறிவர்.

ஆனால், இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டம் நாட்டு மக்களுக்குப் பெரும் ஏமாற்றமே எந்தவிதமான விமோசனம் எதுவும் இல்லை என ஹேமகுமார நாணயக்கார கூறினார். (ரு-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையில் நடந்த படுகொலைகள் ஈ.பி.டி.பி., படையினரின் கூட்டுச் சதி

## வல்வை அனைத்து மக்கள் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ.23

வல்வையில் நடைபெற்ற படுகொலைச் சம்பவம ஈ.பி.டி.பி. மற்றும் அரச படைகளின் கூட்டுச் சதி என வல்வை அனைத்து மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி மாலை வல்வை ஆதி கோயிலடியில், நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:-

வல்வை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்படுகொலைச் சம்பவம், தமிழ்மக்களின் விடியலுக்காகத் தன்னுயிரை ஈந்த மாவீரர்தின நிகழ்வுகளையும், தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50ஆவது பிறந்த தின நிகழ்வுகளையும் குழப்புவதற்காக ஈ.பி.டி.பி. தலைமையில் அரச படைகள் மேற்கொண்ட கூட்டுச்சதி என வல்வை மக்களாகிய நாம் ஆணித்தரமாக வெளியுலகிற்கு அறியத்தருகிறோம். இச்சம்பவத்தில் காயமடைந்ததாகக்கூறி இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரான பொன்னுத்துரை தெய்வேந்திரம் மூலம், எம் மைந்தர்களைக் கொலை செய்ய நாடகமாடியுள்ளனர்.

இக்கொலைச் சம்பவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என உறுதியாகக் கூறுகின்றோம். - எனத் தெரிவித்தனர். (8-70)

# பட்டதாரிகளைப் போன்று எம்மையும் கவனிக்க வேண்டும்

## விவசாய டிப்ளோமாதாரிகள் அரசுக்கு மகஜர்

காரைதீவு,நவ.23

நாட்டிலுள்ள ஒன்பது விவசாயக் கல்லூரிகளிலிருந்து வருடாந்தம் 400 விவசாய டிப்ளோமாதாரிகள் வெளியேறிய போதிலும் அதற்கான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை. இதனை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கோரி விவசாய டிப்ளோமாதாரிகள் சங்கம் அரசுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுப் பட்டதாரிகளைத் தெரிவுசெய்து பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு வழங்குவது போல் எமக்குப் பயிற்சி வழங்காமலே விவசாய ஆசிரியர், விவசாயப் போதனாசிரியர். குடியேற்ற அலுவலர், முந்திரிகை அபிவிருத்தி அலுவலர், தென்னை அபிவிருத்தி அலுவலர் போன்ற பதவிகளை வழங்கமுடியும்.

புதிய அரசு பதவிக்கு வந்து பட்டதாரிகளையும் உயர்தரம் சித்தியடைந்தவர்களையும் கவனிப்பது போன்று எம்மையும் கவனிக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை விவசாயப் பயிற்சி பெற்ற எம்மை புறந்தள்ளிவிட்டு உயர்தரம் படித்தவர்களைத் தெரிவுசெய்து பினபு விவசாயப் பயிற்சி வழங்கி விவசாய போதனாசிரியர் பதவிகளை வழங்குகிறது. இது தேவையா? அரச நிதி துஷ்பிரயோகம் அல்லவா? என்றுள்ளது. (8-214)

### சுற்றுலாத்துறையை மேம்படுத்தக் கலந்துரையாடல

தென்மராட்சி,நவ.23

உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பான ஒரு நாள் செயலமர்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் மாகாண உள்ளூராட்சி அமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வை முன்னெடுப்பதற்காக மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலா விடுதிகள், அழகிய மனங்கவர் இடங்கள் ஆகியவை தொடர்பான விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உதவி உளளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார். (8-117-202)

### மாணவர்களிடையே ஆக்கத்திறன் போட்டிகள்

நெடுந்தீவு,நவ.23

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நெடுந்தீவுக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆக்கத்திறன் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் நோக்கில் மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகள் மற்றும் பொதுஅறிவுப் போட்டிகள் என்பன நடத்தப்படவுள்ளன.

போட்டி தொடர்பான அறிவித்தல்கள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (8-112-202)


உ
சிவமயம்

வியாபாரிமூலை ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் சமாதி ஆலய
**புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம்**

மகாகவி பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சமாதி ஆலய

கலசபூசை 24-11-2004 புதன்கிழமை காலை 9.00 மணி
சிவலிங்கப் பிரதிஷ்டை 25-11-2004 வியாழக்கிழமை மாலை 3.00 மணி
மஹாகும்பாபிஷேகம் 26-11-2004 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி
சிவாகம வித்யா பாரதி வேதாந்த
பி.ரி.அருணாசல கார்த்திகேயன் - *திருவண்ணாமலை அவர்களின் தலைமையின்கீழ் கிரியாகால நிகழ்வுகள் இடம்பெறும்.*
26-11-2004 காலை 10.00 மணி
ஆசியுரை - ஸ்ரீஅருளானந்த சுவாமிகள (ஆந்திரப் பிரதேசம்)
சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை)
சிவஸ்ரீ. வாசுதேவசர்மா (ஸ்ரீவீரபத்திரர் ஆலயம், வியாபாரிமூலை)
கௌரவிப்பு: *சிற்பாசாரியார்* திரு. சொக்கலிங்கம் செல்வம்
சீர்காழி தாலுக்கா நாகபட்டணம்.

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் அறக்கட்டளை.
(38818) (26-19-46)



நிறைந்தது மூன்றாண்டு

பிறப்பு 20 - 08 - 1940



இறப்பு 27 - 11 - 2001

அமரர் தம்பிப்பிள்ளை பரமசிவம்
(ஓய்வுபெற்ற ஆவணஅறைப் பொறுப்பாளர்)
திதி: 23-11-2004

புயல் ஒன்று சரித்திட்ட கோபுரமே!
புவியில் ஒன்றை விட்டுச் சென்றதேனோ?
நித்தமும் நினைவலை நீங்கா நின்றிட
நிறைந்ததுவோ மூன்றாண்டு முழுமையால் இன்று!
*உமது சாந்திக்காக தினமும் இறைவனை வேண்டும்.*

19/2. சாஸ்த்திரியார் லேன்.
அரியாலை
(38838)(26-19-46) - குடும்பத்தினர்.



மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 09 - 1953



இறப்பு 27 - 11 - 2001

திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி
திதி: பூர்வபக்க துவாதசி

ஆண்டுகள் மூன்று கடந்தாலும் ஆறவில்லை எம்மனம்
ஈண்டு உங்களை நினைந்தே இங்கு நாம் வாழ்கிறோம்

குப்பிழான்,
ஏழாலை.
(38839)(26-19-46)
அருள்ராசலிங்கம் (கணவர்) மற்றும் தாய், சகோதரர்கள்.





சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணக்கியல் தகைமைகள் உங்கள் வாசல் படியில் கிடைக்கின்றன.

**Association of Chartered Certified Accountants**

மற்றவர்களை விடத் தனித்துவமானவராக விரும்பினால்
தெரிவுசெய்யுங்கள்

ஏன் ACCA:
- ACCA கற்பதன் மூலம் தொழில்சார் தகைமையையும் பட்டத்தினையும் வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொள்ளலாம்.
- ACCA தொடங்கப்பட்டு 100 வருடங்கள் ஆகின்றன.
- உலகில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கணக்கியல் துறை ஆகும்.

ACCA

Part I 6 months → Part II 1 year → B.Sc.(Hons) Applied Accounting Oxford Brooks University -U.K.

Batch 1 — 02 December 04

| | | |
|---|---|---|
| THU | 10.00-12.00 | Preparing Financial Statements |
| THU | 12.00-2.00 | Managing People |
| FRI. | 10.00-12.00 | Financial Information for Management |

Batch 2 — 03 December 04

| | | |
|---|---|---|
| MON. | 5.00-7.00 | Preparing Financial Statements |
| WED. | 5.00-7.00 | Managing People |
| FRI. | 5.00-7.00 | Financial Information for Management |

Batch 3 — 04 December 04

| | | |
|---|---|---|
| SAT. | 10.00-12.00 | Managing People |
| SAT. | 12.00-2.00 | Preparing Financial Statements |
| SAT. | 4.00-6.00 | Financial Information for Management |

UNIVENTURES Institute of Business Management
☎ 0777 918280

# முதல் பதிவுகளை மேற்கொள்ளும் 10 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படும்.
# 100% பயிற்சி அளிக்கப்படும்.
# ஆங்கிலம் இலவசமாகக் கற்பிக்கப்படும்
55, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.
(C/39187)



நீங்கா நினைவுகளில் ஒன்பதாம் ஆண்டு

தோற்றம் 03 - 11 - 1941



மறைவு 23 . 11 . 1995



தோற்றம் 18 - 08 - 1983

அமரர் கனகசபை சண்முகசுந்தரம்
[உரிமையாளர், சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்]

அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்
[டியூக்கோ]
[மாணவன், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி]

அன்பு அப்பாவை ஆசைத் தம்பியை
ஒன்றாய் இழந்து ஓயாத சோகத்தில்
ஒன்பது ஆண்டுகள் ஓடி முடிந்தும்
இன்றும் உங்கள் நினைவில் வாழ்கின்றோம்.

சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்,
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2763
டியூக்கோ ரேடேர்ஸ், 212, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
"துர்க்கா இல்லம்" ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P.No: 021 222 6322
(39176)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

கோப்பாய்,நவ.23

மாவீரர் தினத்தை முன்னிட்டு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்விகற்று மாவீரராகியவர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ஸ்ரீ பூங்குன்றன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நினைவுரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

கலைநிகழ்ச்சியில் 'நாமிருக்கும் நாடு நமது என்பதை அறிந்தாரோ / அறியவில்லையோ? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறும். (8-72-202)

❑ ❑ ❑ ❑

யாழ்ப்பாணம்,நவ.23

புங்குடுதீவு- நயினாதீவு ப.நோ.கூ.சங்கத்தின் ஏற்பாட்டில் சங்க எல்லைப்பரப்பிற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சங்கத் தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவீரர் பெற்றோர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

தொடர்ந்து மாவீரர் நாள் நினைவாக பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வினாடி-வினாப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும் மாவீரர்களின் நினைவுச் சிறப்புரைகளும் இடம்பெற்றன.(3-204)

❑ ❑ ❑ ❑

தம்பாட்டி தேசிய எழுச்சிப் பேரவை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் தம்பாட்டியில் இடம்பெற்றது.

தம்பாட்டி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேரவையைச் சேர்ந்த ஜெயசிறி, குணசீலன், ஜெயக்குமார் ஆகியோர் பொதுச்சுடரினையும், ஊர்காவற்றுறை பிரதேசப் பொறுப்பாளர் ரதன் தேசியக் கொடியினையும், மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடரினையும் ஏற்றினர்.

மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பினைத் தொடர்ந்து மாவீரர் நினைவுரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (3-204)

❑ ❑ ❑ ❑

யாழ்ப்பாணம்,நவ.23

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தலைவர் எஸ். நல்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

சிறப்புரைகளை தேசிய எழுச்சிப்பேரவையின் ஊடகப் பேச்சாளர் பி.கனகலிங்கம், வேலணை பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர், யாழ்.நம்பி யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சி.செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர். (3-204)

❑ ❑ ❑ ❑

சுழிபுரம்,நவ.23

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணம் அடைந்த பண்ணாகம் கிராம மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு வைபவம் கடந்த ஞாயிறுக் கிழமை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பெரும் தொகையான பொதுமக்கள் வைபவத்தில் கலந்துசிறப்பித்தினர். (3-28)




## அம்பாறை மாவட்டத்தில்

# கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் பிரதான மாவீரர்தின நிகழ்வுக்கு ஏற்பாடு

### உணர்வெழுச்சியுடன் கொண்டாட மக்கள் தயாராகின்றனர்

மட்டக்களப்பு,நவ.23

காரைதீவு மாவட்டத்தில் மாவீரர் தின நிகழ்வையொட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

தமிழர் கிராமங்களில் ஆங்காங்கே நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்ற அதே வேளை பிரதான நிகழ்வு கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கென அப்பிரதேசம் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது. காஞ்சிரன்குடா பிரதான வீதியில் அலங்கார நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் த.குயிலின்பன், சிறப்புத் தளபதி ஜனார்த்தனன் ஆகியோரின் வழிகாட்டலில் பொதுமக்கள் மாவீரர் தின நிகழ்வுக்கு தயாராகி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் வீரச்சாவடைந்த 800 போராளிகளில் 21 போராளிகள் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 800 மாவீரர்களின் திருவுருவப்படங்கள் குளம் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் மக்கள், பெற்றோர் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன.

கஞ்சிகுடிச்சாறுகுளம் 1939ஆம் ஆண்டு ஆங்கிலேயப் பொறியியலாளர் ஜே.எஸ்.கெனடியும் கேரளப் பொறியியலாளர்களான கொச்சியார், ஏபிரகாம் ஆகியோரும் இணைந்து தோற்றுவிக்கப்பட்டது. இக்குளத்தின் மறுபுறத்தே துயிலுமில்லம் அமைந்துள்ளது. இப்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் இன வன்செயலில் அகப்பட்ட கஞ்சிகுடிச்சாறு தமிழ்மக்கள், 1990 இல் திருக்கோயிலில் தஞ்சமடைந்து பின்பு கடந்த 2002 ஆம் ஆண்டில் மீளச் சொந்த இடத்தில் குடியேறினர். எனினும் போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லையென்பது குறைபாடாகும்.

மாவீரர் தினத்தையொட்டி கஞ்சிகுடிச்சாற்றுக்கு வருகைதரவிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது அகவையை முன்னிட்டு ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் விசேட பூஜைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. திருக்கோயில் சமாதிப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜையின் பின்னர் 50 தென்னங் கன்றுகளும் நடப்படவுள்ளன.

(8-214)

# இதயக்கோயிலில் புனிதர்களாக பூசிக்கப்படவேண்டியவர்கள்!

### கிழக்குப் பல்கலை மாணவரின் மாவீரர் செய்தியில் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.23

தமிழினத்தின் சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்துள்ள மகத்தான தற்கொடையாளர்கள் காலங்காலமாக எமது இதயக்கோயிலில் புனிதர்களாகப் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

- இவ்வாறு மாவீரர் தினத்தைமுன்னிட்டு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நவம்பர் மாதம் 27ஆம் திகதி தமிழீழத்தின் தேசிய நாளாக முதன்மை பெற்றுள்ளது. எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற காவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை எம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் நாள்.

எம் இனத்தின் சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த இந்த மகத்தான தற்கொடையாளர்களை எம் இதயக் கோயிலில் புனிதர்களாகப் பூசிப்போம்.

இம் மாவீரர்களின் மகத்துவத்தைப் பேணிக் கொள்வோம். தமிழீழத் தாயகத்தின் உறுதியின் உறைவிடமான மாவீரர் துயிலும் இல்லங்களை புனிதப் பிரதேசங்களாகக் கௌரவப் படுத்துவோம்.

இந்நாளைச் சிறப்பிக்கும் வகையில் சமூகச் செயற்பாடுகளை கண்ணியமாக, திறம்பட முனனெடுத்து, காவியமானவர்களின் கால்தடங்களை அர்த்தமுடையதாக்கி கௌரவப்படுத்துவோம்.

மாவீரர் நாளைத் தழுவியதாக, மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவித்து விதை குழிகளினுள்ளே வாழ்பவர்களைப் புனிதப் படுத்துவோம்.

இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களை நினைவிருத்தி 27ஆம் திகதி மாலை 6.35 மணிக்கு ஏக காலத்தில் சுடரேற்றுவதன் மூலம் ஈழத்தமிழர்கள் ஓரணிப்பட்டுள்ளோம் என்பதை வெளிப்படுத்துவோம்.

'ஆறடி மண்கூட எமக்காக வேண்டாம்' என்று சென்ற தேசத்தின் புயல்களையும் முகம் மறைத்து முகவரி காட்டாது வேருக்கு மட்டுமே தெரிந்த விழுதுகளாகிப் போய் தாயகப் பயணத்தின் பெரும் தடைக்கற்களைத் தகர்த்தெறிந்த உயிராயுதங்களையும் பணிந்து, உரமேற்றிக் கொள்வோம் - என்றுள்ளது.

(3-204)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு சாவுமணி அடிக்கவே இந்தச்சதி

யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குச் சாவுமணி அடிக்கும் இவ்வாறானசெயற்பாடுகள வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவை.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து யாழ்.தேசியக் கல்வியல் கல்லூரி சமூகம் விடுத்துள்ள கண்டனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது.

எமது தேசியத் தலைவரின் பிறந்த நாள், மற்றும் மாவீரர்களின் நினைவு தினத்தை தமிழர் தாயகம் எங்கும் தமிழர்வாழும் உலகமெங்கும் கொண்டாட எழுச்சி பூண்டிருக்கும் வேளையில் இவ்வாறான கோரமான படுகொலைகளைச் செய்வதுடனூடாக எழுச்சிபெற்று தமிழினதத்தின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால் திரண்டு நிற்கும் எமது மக்களை அந்நியப்படுத்தலாம் என்று இனவாத சக்திகளும் தேசவிரோதக் கும்பல்களும் கண்டுவரும் கனவு பலிக்கப் போவதில்லை.

இதுபோன்ற படுகொலைகள் எமது மண்ணில தொடர்ந்தும் இடம்பெறுவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இதனை தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றுள்ளது. (8-5-86-6)

# மக்கள் மனதில் நிறைந்தவர் கூட்டுறவாளர் ஞானப்பிரகாசம்

**முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளரும் யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச்சங்க சமாசம், யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றின் ஸ்தாபகருமான அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் நினைவுதினத்தை ஒட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது.**

மறைந்தும் மறையாத மக்கள் மனதை விட்டு நீங்காத பெரியார், அன்பும், அடக்கமும், நிதானமும் கொண்ட பண்பாளர், என்றும் சிரித்த முகத்துடனும், சிந்தையுடனும் செயலாற்றும் செயல் வீரன். மக்கள் சேவையே மகேசன் சேவை எனத் தன்னையே அர்ப்பணித்தவர். ஏழைகளின் வாழ்விற்கு ஒளி கொடுத்து, அவர்களை நாடிச் சென்று, அவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்காக வாழ்ந்த மாமனிதன், அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்.

வீட்டினுள்ளே முடங்கிக் கிடந்த பெண்களை வெளிக்கொணர்ந்து, தமது சொந்தக்காலில் நின்று எம்மாலும் வாழமுடியும் என்ற உண்மையை உணர்த்தியவர். கற்றவர்,கல்லாதோர், ஏழை, பணக்காரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், இனமத பேதமின்றி எங்கும் ஓடிச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தி, பல சாதனைகளைப் புரிந்தவர். கல்விக் களஞ்சியமாகவும், விளையாட்டு வீரனாகவும், செயல் தீரனாகவும், பண்புள்ள பெருமகனாகவும், சிறந்த நிர்வாகியாகவும் அவர் ஆற்றிய பணிகள் எம்மால் என்றும் மறக்க முடியாததும், மதிக்கப்படவேண்டியதுமாகும்.

சேமிப்பென்ற பதத்தை மக்கள் மனதிருத்தி, அதன் பலாபலன்களை எடுத்தியம்பி சேமிக்கத் தூண்டியவர். யாழ்.மாவட்டம் முழுவதும் சென்று கூடுதலாக பெண்களை அணுகி சேமிக்கச்செய்த பெருமை அவரையே சாரும். சமூக அபிவிருத்தி மன்றத்தின் மூலம் பெண்களை இணைத்து குழுக்களாக்கி வறிய வட்டம் என ஆரம்பித்து அவர்களை ஒரு ரூபா வீதம் சேமிக்க வைத்தார்.

வெளிநாட்டு நிதியுதவி முகவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை, வடபகுதிக்கு வரவழைத்துக் கிராமம் தோறும், மக்களின் தேவைகளை சுட்டிக்காட்டி குறிப்பாக விவசாயிகளின் தேவைகள், விவசாய நிலங்கள் கல்லுடைக்கப்பட்டு பண்படுத்தல், விவசாய உபகரணத் தேவைகள் என்பவற்றைச் சுட்டிக்காட்டி யுத்த காலத்தில் கூட பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தார். இத்துடன் நின்றுவிடவில்லை. கிராமத்திலுள்ள வளங்களை இனம் கண்டு அவற்றை மூலப் பொருளகளாக்கி பெண்களின் இடை நேரங்களைப் பயன்படுத்தித் தும்புத் தொழிலில் ஈடுபடவும், கூடுதலாக பனம் பொருள் உற்பத்தியை மேலோங்கச் செய்து இவற்றிற்கெல்லாம் கடனுதவிகளை வழங்கிச் செயற்படச் செய்தார்.

**திருமதி ந.ஜெகதீசன்**
**சமுக அபிவிருத்தி மன்றத் தலைவர்**

இவற்றுடன் நின்றுவிடாது "தன்கடன் பணி செய்வதே" என்பதற்கிணங்க இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் கலை, கலாசாரம், தட்டச்சுப் பயிற்சி, ஆங்கிலக் கல்வி, தையல், வீட்டலங்காரம், சமையல் என்வற்றையும் கற்றுக்கொள்ள வழிவகுத்துக் கொடுத்தார்.

தாய் நாட்டையும். யாழ்.மண் மக்களையும் நேசித்துத் தன்னையே அர்ப்பணித்து மறைந்தும், மக்கள் மனங்களில் நிறைந்து நிற்கிறார் இப்பெரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

எம்மிடம் பாவித்த டிஷ் அன்ரனா (றிசீவர்) (KTV காட்டுடன்) வீடியோ டெக்குகள், எலக்ரோனிக்பொருள்கள் பலதும் விறபனைக்குண்டு. தொடர்பு: எஸ்.சுரேஷ்குமார், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (காங்கேசன்துறை வீதியில்). T.P.: 021 - 4590413. (38693)

தனிப்பட்ட பாவனையில் உள்ள முச்சக்கர வண்டி NPHV XXXX விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 - 6176402, 021 - 4590706. (38851)

10 மாதங்கள் வளர்ந்த அல்சேசன் - பின்சர் சேர்ந்த நல்ல ஆரோக்கியம் உள்ள ஆண் நாய்க் குட்டி விற்பனைக்குண்டு. (ஏற்பூசி போடப்பட்டது) தொடர்பு: சோ.சிவசுந்தரம், 272, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை. T.P.: 222 6338. (38858)

## காணி, வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கில், இலுவந்தி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஏறக்குறைய 15 பரப்புக் காணியும் நல்ல நிலையில் உள்ள பெரிய கல் வீடும் விற்பனைக்குண்டு. இந்தக் காணியில் பலவித மரங்களும் இரண்டு பெரிய கல்லரிக்கட்டு கட்டப்பட்ட கிணறுகளும் மின்சார வசதியும் உண்டு. தொடர்பு: T.P.: 021 2226286. (சி-39226)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, கற்கோவளம் பாடசாலை ஒழுங்கையில் 2பரப்புக் காணியில் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடாபு: K.பாலன். T.P.: 021-226 3016. (சி-39235)

## தவறிவிட்டது

வரணியைச் சேர்ந்த கதிர்காமு இராஜேந்திரம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.800301980V), வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் நெல்லியடிச் சந்திக்கும் அரசடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கரவெட்டி, சாமியன் அரசடி, சுரேஸ், ஒலி, ஒளி பதிப்பகத்தில் ஒப்படைத்துதவவும் T.P.: 077 6545122. (38862)

திருமதி செல்வராசா சிவமணி என்பவரது தேசிய அடையாள அட்டை (437052166V), வங்கிப் பாஸ் புத்தகம் என்பன 17-11-2004 இல திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Dr.S.முகுந்தன், 43/2, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (38861)


# குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

குடாநாட்டில் உள்ள சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையின் காரணமாகவும் போக்குவரத்துச் சிரமத்தினாலும் சந்தைகளுக்கு மரக்கறிகள் எடுத்து வரப்படுவது மிகவும் குறைவாகவேயுள்ளது.

இதனால் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஒரு கிலோ கத்தரிக்காய் 140 ரூபாவுக்கும் பயிற்றங்காய் 200 ரூபாவுக்கும் பாகற்காய் 150 ரூபாவுக்கும் கரட் 80 ரூபாவுக்கும் உருளைகிழங்கு 120 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பண்டத்தரிப்பு, சுங்கானை மற்றும் கல்வியங்காடு ஆகிய சந்தைகளில் வியாபாரம் செய்வோர் திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்துவந்து விற்பனை செய்வதால் விலைகள் அங்கு மேலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. (10-135)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்
### செல்வன் றஜீந்திரராசா சஞ்சிதன்

யா/கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த *செல்வன் ற.சஞ்சிதன* 2004ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றமைக்காக அவரையும் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(38855)

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (26-11-44)

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள்.

## நெஞ்சகலா ஈராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 - 06 - 1937

ஆண்டவன் அணைப்பில் 23 - 11 - 2002

### செல்லையா பேணாட் இராஜேந்திரம்

"உம் முன்னிலையினின்று எனக்கு
நீதி கிடைக்கட்டும்
உம் கண்கள் நேரியன காணட்டும"
*தி.பா. 17:12*

ஈராண்டு ஓடி மறைந்தாலும்
கணம் கணம் உம்நினைவால் வாடுகின்றோம்.
இறைவனில் உம் ஆன்மா
இன்புற்றிருக்க இறைஞ்சுகிறோம்!

2ஆம் கட்டை,
இராஜ வீதி,
கோப்பாய் மத்தி.

மனைவி - இ.பேணடேற்,
மகன் - இ.ஜோய் திலிப்குமார்.

(38856) (26-11-44)


# ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பை அவதானிக்க 5 பேர் கொண்ட குழு

காரைதீவு,நவ.23

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பை உரியவாறு நடைமுறைப்படுத்துவதை அவதானிக்க கல்வியமைச்சினால் ஐந்து பேர் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டுவரும் பிரமாணக் குறிப்பினால் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 146 ஆசிரியர்கள் பயன்பெறவுள்ளனர். கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் எடுத்த நடவடிக்கையை அடுத்தே பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து மேற்படி குழு தனது பணியை ஆரம்பிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)


# IELTS

*Listening, Speaking, Reading, Writing*

Commencing 24th Nov 04

30hour class or 60 hour class



பாடக் குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்

100% coaching for the exam.

By British qualified experienced Lecturers in English

உங்களுக்கு விரும்பிய நேரத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன

Univentures Institute
55, Martyn Road,
Jaffna.
T.P. 0777 918280

## வேலையாள் தேவை

பிளேட்டிங் செய்வதற்கு ஆள்கள் தேவை.
பொலிஸிங் வேலையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**K.V.S. Hardware,**
123, Stanley Road,
Jaffna. (சி-39237)


# ஜனாதிபதிக்கு முறைப்பாடு

கொழும்பு, நவ.23

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் இந்தியாவிலிருந்து கூடுதல் விலைக்கு அரிசியைக் கொள்முதல் செய்துள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவன ஊழியர் சங்கங்கள் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைத்துள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு மெற்றிக் தொன்னுக்கு 230 அமெரிக்க டொலர் வீதம் செலுத்தி அரிசியைக் கொள்முதல் செய்துள்ள நிலையில், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் 285 அமெரிக்க டொலர்களைச் செலுத்தி ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைக் கொள்முதல் செய்துள்ளதாக ஊழியர் சங்கங்கள் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளன. (10-202)


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் ஜேம்ஸ் செல்லையா கிருபைராசா

(Retd. Engineer & Manager Walker&Sons Jaffna Branch)

அவர்கள் 16.11.2004 இல் அமரத்துவமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நடராஜா குடும்பத்தினர்
(உரிமையாளர், முருகன் எலக்ரிக்கல்ஸ்)
தனபாலசிங்கம்
(உரிமையாளர், நல்லைக்குமரன்)

உரிமையாளர்:
லிங்கம் & கோ
ஸ்ரான்லி றோட்,
'வைரம்'
உரிமையாளர்,
(பொறியியல் தொழிலகம்)

(38866)(34-19-44-26)

## ஓராண்டில் ஓலமிடும் நினைவலைகள்

உறவுகள் மகிழ 08 - 02 - 1957



உறவுகள் வியக்க 05 - 12 - 2003

### அமரர் தங்கராஜா செல்வராஜா

(செல்வம் மரக்காலை உரிமையாளரும், பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்)

அன்னம் இட்ட கைகள் - எம்மை
அரவணைக்க மறந்தன!
உழைத்த கரங்கள் - நம்
உறவை மறந்தது
உயிரூட்டிய தெய்வம் - தன்
உயிரை மறந்தது
கால் பதித்த தேசமெங்கும்
காய மறுத்தன
கட்டிய தாலியை - நீங்கள்
காண மறந்தீர்களே - நீங்கள்
கட்டிய கட்டடங்கள்
கண்ணீர் வடிக்கின்றன
அவைகளுடன் நாமும்...!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இணுவில் றோட்,
கந்தமலை வடக்கு,
சுன்னாகம். (38854) (26-11-44)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

# Dr.M.G.R. Deemed University

*உயர்கல்விக்கான வழிகாட்டல்*
*கருத்தரங்குக்கான அழைப்பு*

மாணவ மணிகளே!

*எதிர்வரும் 25.11.2004 வியாழக்கிழமை*
*பிற்பகல் 3.00 மணிக்கு.*

யாழ்ப்பாணம். கே.கே.எஸ்.வீதி.



MPCS கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கும் மாணவர்களது உயர்கல்விக்கான வழிகாட்டல் கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு உங்களையும் உங்கள் பெற்றோர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**Dr.M.G.R.DEEMED UNIVERSITY**
**OFF SHORE CAMPUS INFORMATION AND ADMISSION CENTRE**
No.195, Navalar Road, Jaffna,
T.P.: 021-222 2840

(C.39288)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் வடிகால்கள் இல்லை; பல இடங்களிலும் மழை நீர் தேக்கம்

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கழிவு நீர் வடிந்தோடும் வாய்க்கால்கள் இன்மையால் மழைநீர் தேக்கமடைந்துள்ளது.

கடந்த இருவாரங்களாகத் தொடர்ச்சியாக பெய்த மழையினால் தேங்கிய மழைநீர், மழை ஓய்ந்தும் வழிந்தோடாமல் தேங்கியுள்ளது. குறிப்பாக் டிப்போச் சந்திக்கு அருகில் சிறு குட்டை போல் நீர்தேங்கிக் காணப்படுவதுடன் நுளம்புகளின் பெருக்கத்திற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொது சுகாதார பரிசோதகர்களும் தமிழீழ சுகாதாரசேவையினரும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-393)

## தொடர்மழையினால்
# கண்டாவளைப் பிரதேசத்தில் நெற் செய்கை பாதிப்பு

பரந்தன்,நவ.23

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழைகாரணமாக 2004ஆம், 2005ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைக் கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் நெல் உற்பத்தி முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் 2 ஆயிரம் ஏக்கர் நிலம் நெல்விதைப்பை மேற்கொள்ளமுடியாது வெள்ளத்தில் மூழ்கியுள்ளது எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கண்டாவளைப் பிரதேச விவசாயிகள் நெல்விதைப்பை மேற்கொண்டு, மழையால் அழிவுற்ற 200 ஏக்கர் நெல்வயல்களுக்கும் மற்றும் நெல்விதைப்பை மேற்கொள்ளாது இருக்கும் 2ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கும் நெல் விதைப்பை மேற்கொள்வதற்கு விதைநெல் கிடைக்காமையினால் விவசாயிகள் அலைந்து திரிவதாகவும் கண்டாவளைக் கமக்கார அமைப்புச் செயலாளர் ந.யோகநாதன் தெரிவித்துள்ளார். (8-203-352)



கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கொடிவார ஆரம்பநாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கிளிநொச்சிப் பிரதிநிதிக்கு புனர்வாழ்வுச் சங்கப் பொருளாளர் திருமதி பா.விஜயலட்சுமி முதலாவது கொடியைச் அணிவிப்பதையும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட புனர்வாழ்வுச் சங்க உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். *(படம் : வட்டக்கச்சி செய்தியாளர்)*

## சிறந்த நூலகத் தெரிவு

பரந்தன்,நவ.23

சர்வதேச நூலகதினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சிறந்த பாடசாலை நூலகத் தெரிவில் 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த பாடசாலை நூலகமாகக் கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலய நூலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும், இதற்கான பரிசு வழங்கும் நிகழ்வு அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றதாகவும், அதற்கான அழைப்புக் கடிதம் நிகழ்வு முடிவுற்ற பிறகு வந்துசேர்ந்ததால் அப்பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொள்ளமுடியவில்லை எனவும் தர்மபுரம் மகாவித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (8-352-202)

## தையல், மனையியல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி,நவ.23

மாதர் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் தையல், மனையியல் பயிற்சி

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

நெறிக்கான விண்ணப்பங்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிக்கு 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பளை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (8-6-15)

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் முழங்காவில் விநாயகர் அணி வெற்றி

வேரவில்,நவ.23

இரணைமாதா நகர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியல் முழங்காவில் விநாயகர் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்மேரிஸ் அணிமோதியது.

ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததால் சமநிலை உடைப்பு உதைமூலம் விநாயகர் அணி வெற்றிபெற்றது.

கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் விளையாட்டுக் கழகத் தலைவர் சூ.செல்வரட்ணம் தலைமையில் ஆரம்பித்த நிகழ்வில் பொதுச் சுடரினை பூநகரிப் பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் சமாசப் பொறுப்பாளர் அச்சுதன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக பூநகரிப் பிரதேசச் செயலர், தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர் இன்பன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜன், பூநகரிப் பிரதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர் மூர்த்தி மற்றும் போராளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (8-404)

## நோயாளர்கள் காத்திருப்பு

அக்கராயன்குளம் அரசினர் வைத்திய சாலையில் வெளிநோயளர்கள் காலை நேரத்தல் வைத்தியரை எதிர்பார்த்து நீண்டநேரம் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மாரி காலமாகையால் குழந்தைகள், தாய்மார்கள், வயோதிபர்கள் எனப் பலரும் காய்ச்சல், இருமல் போன்ற நோய்களால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் விடுதியில் உள்ள நோயாளிகளை வைத்தியர் பார்வையிட்டுவரும் வரையில் முற்பகல் 11மணிவரை காத்திருக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-381)

# 'நட்சத்திரங்களின் போர்' உதைபந்தாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்!

வலி.வடக்கு,நவ.23

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்திய 'நட்சத்திரங்களின் போர்' உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மூன்றாம் இடத்திற்கான ஆட்டமும் இறுதி ஆட்டமும் இடம் பெற்றன.

இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தின் போது மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிச் சில நிமிட நேரத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுச் சமநிலைப் படுத்தியது.

தொடர்ந்து இரு அணிகளும் கோல்களைப் பெற முயற்சித்தபோதிலும் ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்களைப் பெறாமையினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 'கோல்டன் கோல்' முறையில் ஆட்டம் இடம் பெற்றது. முதல் ஐந்து நிமிடத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை.

இரண்டாவதாக வழங்கப்பட்ட ஐந்து நிமிடத்தின் இரண்டாவது நிமிடத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மேலும் ஒரு கோலைப் பெற்று தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டது.

2-1 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் விளையாடியதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரியை வெற்றி கொண்டது. (10-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ள 18 வயதுப்பிரிவினருக்கான ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம் எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி.

★ யாழ் இந்துக் கல்லூரி எதிர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

★ புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி. (10-5)

# நியூஸிலாந்துடனான டெஸ்ட் போட்டி ஆஸ்திரேலியாவுக்கு அபார வெற்றி

பிரிஸ்பேன்,நவ.23

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி ஓர் இனிங்ஸாலும் 156 ஓட்டங்களாலும் அபாரவெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 353 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் மத்தியூ சின்கிளயர் 69 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓராம் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களையும் எடுத்தனா. பந்துவீச்சில் கஸ்பரோவிச், ஷேன் வோர்ண் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 585 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் கிளார்க் 141 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் 126 ஓட்டங்களையும் மார்ட்டின் 70 ஓட்டங்களையும் மக்ராத் 61 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணியின் சார்பில் மார்ட்டின் 5 விக்கெட்டுக்களையும் டானியல் வெட்டோரி 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதனையடுத்து இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 76 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் ஷேன்வோர்ன் 4 விக்கெட்டுக்களையும் மக்ராத் 3 விக்கெட்டுக்களையும் கிலெஸ்பி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கிளார்க் தெரிவானார். (10)

# 'சங்ஸ்ரார்' கிண்ணத்தை வென்றது யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம்,நவ.23

அகில இலங்கை ரீதியி 'சங்ஸ்ரார்' கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட 19 வயதிற்கு உட்பட்டோருக்கான பிரிவு இரண்டு உதைபந்தாட் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டி பண்டாரவளை மாநகரசபை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து மாவனல்ல ஷாஹிராக் கல்லூரி விளையாடியது.

ஆரம்பத்தில் இப்போட்டி விறுவிறுப்பாக இருந்தபோதிலும் சென்பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள் தமது முதலாவது கோலைப் பெற்றதைத் தொடர்ந்து எதிர் அணியினரின் ஆட்டம் சோபையிழந்தது. தொடர்ந்து உற்சாகமாக விளையாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 5-0 என்ற கோல் கணக்கில் ஷாஹிராக் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

வென்னப்புவ ஜோசப்வாஸ் கல்லூரிக்கும் கந்தானை டிறெசன்ட் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற மற்றுமொரு போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதையின் போது கந்தானை டிறெசன்ட் கல்லூரி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.(10-86-190)

# ஆடுகளம் சுழல் பந்துக்கு சாதகமாக இல்லை தமிழக வீரர் முரளிகார்த்திக் தெரிவிப்பு

கான்பூர்,நவ.23

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றுவரும் கான்பூர் விளையாட்டு மைதானம் சுழல்பந்து வீச்சுக்கு ஏற்றதல்ல என்று இந்திய அணியின் சுழல் பந்துவீச்சாளர் முரளி கார்த்திக் தெரிவித்துள்ளார்.

இரண்டுநாள் ஆட்டத்தின் முடிவில் தென்னாபிரிக்கா 459 ஓட்டங்களைக் குவித்தது. இந்தியப் பந்துவீச்சாளர்கள் முதல் நாள் ஆட்டத்தில் 4விக்கெட்டுகளையும் இரண்டாவது நாள் ஆட்டத்தில் 3 விக்கெட்டுக்களையும் எடுத்தனர். பந்துவீச்சாளர்களின் பரிதாப நிலையை இது காட்டியது. இதில் கும்ளேக்கு 5 விக்கெட்டுகளும் ஹர்பஜன்சிங், கங்குலி ஆகியோருக்கு தலா ஒரு விக்கெட்டும் கிடைத்தன.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடந்த டெஸ்டில் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இந்தியாவின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் தமிழக வீரர் முரளி கார்த்திக், ரயில்வே அணிக்காக விளையாடும் அவரால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான கான்பூர் டெஸ்டில் 2 நாள் ஆட்டத்தின் முடிவில் ஒரு விக்கெட்டைக் கூடக் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

இந்நிலையில் கான்பூர் ஆடுகளம் சுழல்பந்து வீச்சுக்கு சாதகமாக இல்லை என்று முரளி கார்த்திக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகம் அளிக்கும் வகையில் இருந்தது. பந்துவீச்சாளர்கள் விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவது எளிதாக இல்லை. இரணடாம் நாளும் ஆடுகளம் சுழல் பந்து வீச்சுக்குச் சாதகமாக இல்லை.

5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கும்ளே இந்த விக்கெட்டுக்களை எளிதாக கைப்பற்றவில்லை கடின போராட்டத்திற்குப் பிறகே அவரால் கைப்பற்ற முடிந்தது என்றார். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 50 ஆவது அகவை காணும் பெரும் தலைவன் வாழ்க



நினைத்தாலே உன்னதம்
உரைத்தாலே பெருமிதம்
எங்கள் தலைவன் பேரைச்
சொன்னாலே உத்தமம்
கண்ணீர் சுமந்திருந்தோம்
கனவுகளும் காணமறந்தோம்
விடுதலை என்னும் வழி அறியும்
திராணியும் இல்லாதிருந்தோம்
இந்நிலைகள் மறைந்தன
தமிழர் தலைகள் நேரே நிமிர்ந்தன
பிரபாகரன் என்பதே
தமிழர் தலைவிதியின்
உயர் வரலாற்றின் பேராம்
உயர்வு ஈந்த வீரன்
தமிழினம் நற்பொலிவு பெற
வலிமை தந்த தீரன்
அகவை ஐம்பதிற்கு வருகிறான்
உள்ளம் குளிர்ந்து வாழ்த்துகின்றோம்
நன்றே வாழ்க! நலமே வாழ்க.!!

வடமராட்சி சொகுசு வாகனம் (ஹைஏஸ்) கிளை
வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம்.
(சி-39241) (32-16-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 16 - 01 - 1994 | 24 - 10 - 2004 |



### செல்வி நேசதுரை நிதர்சினி

(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி)

சிரித்த முகமெங்கே? சிங்காரப் பேச்செங்கே?
கன்னத்துக் குழிகளெங்கே?
வாடாத மலராய் நீ வாசந்தருவாய் என பார்த்திருக்க
கூடாத கொடிய நோய் வந்து
உனைக் கொண்டு சென்றதுவோ?
வாராயோ எமைத்தேடி மீண்டும் இப்புவியில்!

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (சி-39242) (43-16-18-32) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எனது ஆருயிர் நண்பன்
கிருஷ்ணதேவா நந்தகுமார்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பஞ்சாட்சரேஸ்வரி கிருஷ்ணதேவா

அவர்களின் மறைவு மிகுந்த கவலையைத் தருகின்றது. அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

மருதகோட்டம்,
மானிப்பாய். (38869) (26-16-18-32) அமுதர் ஐயா - ராஜன்.

## மரண அறிவித்தல்

### செல்வி
### வனிதா (எஸ்ரர்) இரத்தினம்



காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் திருமதி நல்லம்மா அவர்களின் ஏக புதல்வி செல்வி வனிதா (எஸ்ரர்) இரத்தினம் அவர்கள் நேற்று (22-11-2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் றஞ்சமோகன், சந்திரமோகன் (டோஹா), றதீஸ்வரன் (ஜேம்ஸ் போதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி பத்மினி தேவியின் மைத்துனியும் ஜான்சன், ஜோன்சன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனைகள் கலைப்புலவர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (23-11-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/7, கலைப்புலவர் வீதி,
off ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (38864) (26-16-18-32)

தகவல்:
றதீஸ்வரன் ஜேம்ஸ்
(சீயோன் தேவாலயம்).

# மணற்காட்டுக்கு இராணுவத் தளபதி விஜயம்

வடமராட்சி,நவ.23

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதிக்கு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் கடந்த வியாழக்கிழமை விஜயம்செய்து அங்குள்ள இராணுவ நிலைகளைப் பார்வையிட்டதுடன், கிராமமக்களின் பிரச்சினை தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

மணற்காட்டுப் பங்குத் தந்தை அருட்திரு பெர்ணாண்ட், கிராம சேவையாளர் தோமஸ் யூட், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ஜீவரெட்ணம் ,ஆகியோரையும் இராணுவத் தளபதி சந்தித்து கலந்துரையாடினர். (3-173)

# சித்திரக் கண்காட்சி

வலி.வடக்கு, நவ.23

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியசாலையில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்குப் பாடசாலை அதிபர் சி.சிவநடராசா தலைமையில் ஏழாலை குடும்பப் பாடசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

பாடசாலையின் நூலகக் கண்காட்சி காலை 9.00 மணிமுதல் பிற்கல் 5.00 மணி வரை பெற்றோர்களுக்காக இடம்பெறவுள்ளது. (10-86)

# பெண்கள் பணியகத்தின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.23

மகளிர் விவகார, சமூக சேவைகள் அமைச்சின் பெண்கள் பணியகத்தின் அனுசரணையுடன் பல்வேறுபாடு, வம்சவிருத்திச் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வுச் செயற்றிட்டக் கருத்தரங்கு கடந்த 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி ம.மரியதாசன், சுகாதாரக்கல்வி அதிகாரி கு.சிவலிங்கம், பொதுச்சுகாதார சாரணிய சகோதரி செல்வி லட்சுமி சிவஞான சுந்தரம், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தைச் சேர்ந்த திருமதி செறின் மில்ரன், பொலீஸ் திணைக்கள உத்தியோகத்தர் கல்யாணி, சாந்திக உளவளத்துறை நிலையத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரி வ.அனவரதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (10-202)

# சேவைநலன் பாராட்டு விழா

நெடுந்தீவு,நவ.23

நெடுந்தீவுப் பிரதேச சபையில் கடந்த பல வருடங்களாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களான சிதம்பரப்பிள்ளை செல்லையா, கார்த்திகேசு குலேந்திரன் ஆகியோருக்கான சேவைநலன் பாராட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேசசபை ... மண்டபத்தில் நடைபெற்றது. (எ-112)

# கரை ஒதுங்கிய மர்மப்பொருள்

வடமராட்சி,நவ.23

மணற்காட்டுக் கடலிலிருந்து பூகோள வடிவத்தில் மர்மப்பொருளொன்று கடந்த ஞாயிறு இரவு கரையொதுங்கியது.

சுமார் 3 அடி உயரம் 3 அடி அகலம் கொண்ட சில்வர் நிறமுடைய இந்த மர்மப் பொருளில் சில இலக்கங்களும் XNP என எழுத்துக்களும் காணப்பட்டன.

கரை ஒதுங்கிய இம் மர்மப்பொருளை மணற்காட்டுக் கரையோரத்தின் காவலரணில் உள்ள படையினர் பொறுப்பேற்று பாதுகாப்புடன் வைத்துள்ளனர்.

இது குறித்துப் படையினர் மேலிடத்துக்குத் தகவல் கொடுத்துள்ளதாக அறியப்படுகின்றது. (3-173-202)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்விபயிலும்
**ஞானேஸ்வரன் பவ்சிகா** அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின்
ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், கோண்டாவில் (38874) (16-18-32)

யாழ்ப்பாணக் கல்வி வலய நல்லூர் பிரதேச
முன்பள்ளிகளின்

## பெற்றோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கலைநிகழ்வும்

இடம்:- முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம்
(யாழ்.கல்வி வலயத்திற்கு முன்பாக)
காலம்: இன்று (2004-11-23) செவ்வாய்க்கிழமை -
- பி.ப.1.30 மணி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி லோ.யோகராஜா
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்வலயம். (38872) (43-16-18-32) - விழாக்குழுவினர்.

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 18 - 12 - 1973 | 23 - 11 - 1996 |



### கந்தையா ரவிந்திரா (ரவி)

ஒரு கொடியில் மலர்ந்தாய்
பஞ்சமரில் ஒருவனாய் வாழ்ந்தாய்
காலச் சக்கர சுழற்சியால் நாமும் வெளிநாடு ஏகிட
நீயோ தாயகம் மீட்க தலைவன் படை சேர்ந்தாய்

உமது ஆத்ம சாந்திக்காக நெழுவினிப்
பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அஜந்தா,
4 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

பிரிவால் கலங்கித் தவிக்கும் அன்பு
அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்கா,
அண்ணிமார், மச்சான், மருமக்கள்
(சி-39243) (16-18-32)

உ
சிவமயம்

## மாரியம்மன் திருமண சேவை
## திருப்புவிழா வைபவம்

வி.எஸ்/பிஆர்/106/வி.என்பிஆர்/24/2003

எமது மாரியம்மன் திருமண சேவையில் யாழ், கொழும்பு, இந்திய வம்சாவளி, இந்து, Rc, உள்நாட்டு, வெளிநாட்டுச் சேவை மூலம் மணமக்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம். இச்சேவை எதிர்வரும் 27.11-2004 சனிக்கிழமை காலை சுபநேரம் (7.41 - 9.05) சுபமுகூர்த்தத்தில் சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள நிலையத்தில் மங்களகரமாக ஆரம்பித்துவைக் கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். அன்பர்கள், நண்பர்கள், பொதுமக்கள், ஆதரவா ளர்கள் இச்சேவையைப் பயன்படுத்தி தங்கள் எதிர்பார்ப்புகளை உடனுக்குடன் பூர்த்திசெய்துகொள்ளலாம்.

01. மங்கள விளக்கேற்றல் - மு.சிவசுப்பிரமணியம் (மட்டுவில் இளை. சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர்)
02. இறைவணக்கம் - செல்வன் அருண்குமார் அருந்தவராஜா
03. பெயர்ப்பலகை திரைநீக்கம் - இராமநாதன் (கைதடி) (சோதிடர்)
04. ஆசியுரை - சின்னத்தம்பி (சாவகச்சேரி) (இளை. பொலீஸ் அதிகாரி)
05. வரவேற்புரை - இராஜசிங்கம் (லண்டன்) (இளை. கூட்டுறவு பரிசோதகர்)
06. தலைமையுரை - திரு. இராமநாதன் (பிரபல சோதிடர் - கைதடி)
07. விருந்தினர் உரை - மு.சிவசுப்பிரமணியம் (இளை. தொழில்நுட்பவியலாளர்)
08. ஏனைய பிறவிடயங்கள் - சின்னத்தம்பி (இளை.இ பொ. உத்தியோகத்தர்)
09. நன்றியுரை

என்றும் தங்கள் சேவைக்குரிய
கு.அருந்தவராஜா
பிரதான அமைப்பாளர்.

விலாசம்: கு.அருந்தவராஜா
காளிகோயிலடி,
ஏழாலை மத்தி, ஏழாலை,
T.P: 0776165257

(38865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க நெடுந்தீவு பிரதேசத்தில் விரிவான ஏற்பாடுகள்

நெடுந்தீவு,நவ.23

நெடுந்தீவுப் பிரதேசத்தில் இம்முறை மாவீரர் தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு தேசிய எழுச்சிப்பேரவை மேற்கொண்டு வருகின்றது.

முக்கிய இடங்களில் பதாதைகள் கட்டப்பட்டுள்ளதுடன், வளைவுகள் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றன.

நெடுந்தீவுப்பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள மாவீரர் நினைவுச்சுடரில் இருந்து பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு நெடுந்தீவு மகாவித்தியாலய உள்ளக அரங்கில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை - 26ஆம் திகதி மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர்களை மாவீரர்களின் கல்லறை அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு பிரதேச அரசியல்துறையினரும், தேசிய எழுச்சிப் பேரவையினரும் மேற்கொண்டுள்ளனர்.

(எ-112)



யாழ்.சோமசுந்தரம் அவெனயூவில் உள்ள சோமசுந்தரம் பாலர் பாடசாலையின் ஆசிரியர் தினவிழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது பெற்றோர் சங்கத் தலைவர் யோ.பத்திநாதன் (கிராம அலுவலர்) தலைமையுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

# கிணற்றுக்குள் வீழ்ந்து குடும்பப்பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,நவ.23

குடும்பப் பெண் ஒருவர் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் புளியங்கூடல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புளியங்கூடலைச் சேர்ந்த கனகரத்தினம் தனபதி (வயது 59) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற சமயம் இவர் கிணற்றில் தவறிவீழ்ந்து உயிரிழந்தார் என உயிரிழந்தவரின் உறவினர்கள் தரப்பில் கூறப்பட்டது.

(எ-7)


## கணனி ஆசிரியர்கள் தேவை

**VISUAL TECH, Station Road, Chunnakam.**
**T.P.No:- 0777 187943**

Software Engineering, Hardware Engineering, Desktop Publishing, Network Engineering, Ms Office, Multimedia, Java, C++, Visual Basic ஆகியவற்றிற்கு தேர்ச்சி பெற்ற அனுபவம் உள்ள ஆசிரியர்கள் உடன் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தமது Bio Data இனை (10.12.2004) இற்குள் கிடைக்கக்கூடியவாறு ச.கௌசிகன், நீதிமன்ற வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடன் அனுப்பிவைக்கவும். நேர்முகத் தேர்வின்போது சம்பளமும் மற்றையவைகளும் பேசித் தீர்மானிக்கப்படும்.

-நிர்வாகி.

(38875)(29-13-14-43)


## மரண அறிவித்தல்கள்

### வீரவாகு சுப்பிரமணியம்

**(இளைப்பாறிய கூட்டுறவுப்பரிசோதகர்)**

'குளிப்பொன்' வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த வீரவாகு சுப்பிரமணியம் 19.11.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, நவரத்தினம், மாணிக்கவாசகர் மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குமாரசுவாமி மற்றும் சண்முகவடிவேல் (கிருஷ்ணானந்தா - 'தயாள்பார்க்' இராதாசுவாமி ஆச்சிரமம், இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் தேவி விஜயலட்சுமியின் (தேவி - ஜேர்மனி) அருமைத் தகப்பனாரும் புத்திரசிகாமணியின் (புத்திரன் - ஜேர்மனி) அருமை மாமனாரும் மயூரதீபன் (ஜேர்மனி), பிறேமதீபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2004) செவ்வாய்க் கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கியாறு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'குளிப்பொன்'*
*வட்டுக்கோட்டை கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.*

(38879)(43-13-14)

தகவல்:
ந.புத்திரசிகாமணி
(மருமகன்).

### செல்லப்பா சாந்தகுமார் (இன்பம்)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சாந்தகுமார் நேற்று (22.11.2004) அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் செல்லப்பா - தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும் கிருஷ்ணகுணசிங்கம், கிருஷ்ணவதி, ஜீவகுமார், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் ஈஸ்வரி, ஈஸ்வரன் (நிர்வாகி, ஈசன் கல்வி நிலையம் - கோண்டாவில்), காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் வசந்தரூபன், மோகனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் பூபாலசிங்கம், சஞ்சீவன், சந்திரகுமார், ராகினி, இந்திராணி, ராகினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(38877)(43-13-14)

தகவல்:
க.செல்லப்பா
(தந்தை).

# நேற்றுப் பெய்த பெரும் மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

அரியாலை,நவ.23

நேற்று பெய்த கடும் மழையினால் யாழ். நகரை அண்டிய தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம ஏற்பட்டுள்ளது.

நகரை அண்டிய அரியாலை, ஈச்சமோட்டை, கொட்டடி, நாவாந்துறை, ஆரியகுளம், திருநகர் போன்ற பகுதிகளில் தாழ்ந்த பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், சிலரது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து காணப்பட்டது.

நேற்று பெய்த தொடர் மழையினால் மக்களின் அன்றாடப் பணிகளும் நேற்று பாதிக்கப்பட்டிருந்தன.

(எ-17)

# வெங்காயச் செய்கையில் நீர்வேலி விவசாயிகள் ஆர்வம்

அரியாலை,நவ.23

நீர்வேலி, ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி போன்ற பகுதிகளில் விவசாயிகள் தற்போது வெங்காயச் செய்கையை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

தற்போது மாரிகாலம் ஆகையால் விவசாயிகள் மேட்டுநில தோட்டங்களிலேயே வெங்காயச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

(எ-17)

## தவறிவிட்டது

**கோப்பாய் சந்திக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் இடையில் 21.11.2004 அன்று முக்கிய ஆவணங்களுடன் பேஸ் ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கணபதி பாலசிங்கம், ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.** (சி-39244)


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

துளிருட்டப்பட்டது 2 ஆவது வெற்றிவாரம் காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே.)

தனுஷ், பிரியா நடித்த



ட்ரீம்ஸ் (ரீல்ஸ)

வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக RAMBO-3

(சி-39052)

நிரஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிநேகா நடித்த

ஜனா (ரீல்ஸ்)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) RAMBO - 3

(சி-39051)

ராஜா யாழ்ப்பாணம்

அஜித் + அஜித், பூஜா நடித்த

அட்டகாசம் (ரீல்ஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38750)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சரத்குமார், நிலா, வடிவேல் நடித்த

டொல்பி ஒலி அமைப்புடன்



தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


# மரக்கன்று வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.23

மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்திய சாயி சமித்தியில் வைத்து இன்று மாலை 5.30 மணியளவில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தென்னை, தேக்கு, மலைவேம்பு, கமுகு, தோடை முதலிய மரங்கள் இந்நிகழ்வில் வைத்து உரியவர்களிடம் கையளிக்கப்படும்.

(எ)

# இலங்கைக்கு நிபந்தனையின்றி உதவுவதற்குப் பாகிஸ்தான் தயார்

கொழும்பு,நவ.23

எவ்வித நிபந்தனைகளுமின்றி இலங்கைக்கு உதவி வழங்க பாகிஸ்தான் தயாராக உள்ளது. இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை அது வழங்கும் என்று பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வர்த்தக சமூகத்தினர் மத்தியில் உரையாற்றிய அவர், பாகிஸ்தானில் தொழில் திட்டங்களை ஆரம்பிக்க விரும்பும் இலங்கையர்களுக்கு சகலவித உதவிகளும் வழங்கப்படும் -என்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

தாம் விடுத்த வேண்டுகோளின்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஜனவரியில் பாகிஸ்தான் வரவுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இலங்கைவந்த அவர், ஜனாதிபதி, பிரதமர் உட்படப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க)

# மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் திருகோணமலையில் ஆரம்பம்

திருகோணமலை,நவ.23

திருகோணமலை மாவட்டத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள இந்து கலாசார மண்டபத்தில் நேற்று இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றுள்ளது. நூற்றுக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள் இங்கு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் காருண்யா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் மாவீரர்களின் பெற்றோர்களைப் பாராட்டிக்கௌரவித்துள்ளார்.

இன்று செவ்வாயன்று தம்பலகாமத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(எ)

## மரண அறிவித்தல்கள்

### வேதாரணியேஸ்வரக்குருக்கள் சிவசுப்பிரமணியக்குருக்கள்



சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் குருக்களும் பிரபல ஓவியருமான சிவசுப்பிரமணியக்குருக்கள் அவர்கள் நேற்று (22.11.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் பறாளாய் காலஞ்சென்ற வேதாரணியேஸ்வரக்குருக்கள்-வீணாவாதவிதூஷிணி அம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் புவனேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் காரைநகர் காலஞ்சென்ற பஞ்சாட்சரக் குருக்கள், வாலாம்பிகை அம்மா ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சுகுமாரசர்மா, காலஞ்சென்ற ஜெயந்தகுமாரசர்மா மற்றும் கமலவதனி (பிரான்ஸ்), பாலகுமாரசர்மா (இந்தியா), ஜெகதானந்தி (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தந்தையும் வேங்கடசுப்பிரமணியசர்மா (பிரான்ஸ்), விசாலாட்சி (இந்தியா), சசிகரசர்மா (ஜேர்மனி) ஆகியோரது அன்பு மாமனாரும் திருமதி ஸ்ரீகிருஷ்ணப்பிரியா ஜனர்தனசர்மா, ஜெகத்பிரியன், ஷண்முகப்பிரியன், வேதேஸ்வரசர்மா, விதூஷினி, விபூஷிதா, யாமினி, சயந்தன் சர்மா, சரண்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் பொன்னாலை காலஞ்சென்ற திருமதி வைத்தீஸ்வரசர்மா, நவாலி திருமதி விஸ்வநாதக்குருக்கள் (கொழும்பு), முத்துக்குமாரசாமிசர்மா (கனடா), திருமதி வரதராஜசர்மா (கனடா), காலஞ்சென்ற திருமதி சுப்பிரமணியசர்மா (அம்பாறை), சத்தியமூர்த்திசர்மா (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2004) புதன் கிழமை காலை 10 மணியளவில் அவரது பறாளாய் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் திருவடிநிலை இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பறாளாய்,*
*சுழிபுரம்.*

(38871)(43-13-14)

தகவல்:
சி.பாலகுமாரசர்மா
(மகன்).

### திருமதி கனகரத்தினம் தனபதி

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் தனபதி அவர்கள் நேற்று (22.11.2004) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற புங்குடுதீவு சுப்பையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் தமிழ்ச்செல்வன் (பிரான்ஸ்), ஜெகதாம்பாள், காலஞ்சென்ற தவச்செல்வன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (அருமை போசனசாலை - யாழ்ப்பாணம்), அன்னசோதி, அருள்பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சிவஞானம், புஸ்பவதி ஆகியோரின் மைத்துனியும் அகிலேஸ்வரனின் அன்பு மாமியாரும் லஷ்ணாவின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2004) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்குத் தகனக்கிரியைக்காகப் புளியங்கூடல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுருவில் றோட்,*
*புளியங்கூடல் வடக்கு,*
*புளியங்கூடல்.*

(38876)(43-13-14)

தகவல்:
வே.அகிலேஸ்வரன்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மினிசூறாவளியின் தாக்கத்தால் யாழ்.பிரதம தபாலகத்தில் 'லெவல்' சீற்றுக்கள் பலத்த சேதமடைந்திருப்பதை முதலாவது படத்திலும் - சூறாவளியினால் தூக்கி வீசப்பட்ட கூரைத் தகடுகளை மீளப் பொருத்தும் பணியில் சிலர் ஈடுபட்டிருப்பதை அடுத்துள்ள படத்திலும் - காணலாம்.

*(படங்கள்: தேவா)*

# ஒருமணி நேர சேவை நீடிப்பானது சர்வதேச விதிகளுக்கு முரணானது

## ஆசிரிய சங்கங்கள் ஒன்றுகூடி எதிர்ப்புத் தெரிவிப்பு

காரைதீவு,நவ.23

அண்மையில் நிதியமைச்சர் தெரிவித்த ஒரு மணி சேவை நேர நீடிப்பு சர்வதேச தொழில் சட்டவிதிகளுக்கு முரணானது. இந்தப் புதிய நடைமுறைக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

- இவ்வாறு சர்வதேச கல்வியகத்தில் (EI) அங்கம் வகிக்கும் இலங்கையின் ஆறு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கூடி ஏகமனதாகத் தீமானம் நிறைவேற்றியுள்ளன.

இத்தீர்மானத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவிற்கும் அவர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

அத்துடன், இவ்விவகாரம் சர்வதேச கல்வியகத்தினதும் நோர்வே ஆசிரியர் சங்கச் சம்மேளனத்தினதும் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி ஆறு தொழிற்சங்கங்களினதும் அவசர ஒன்றுகூடல் நேற்று கொழும்பு கனடா இல்லத்தில் ஒன்றியத் தலைவர் ஷாபிமரைக்கார் தலைமையில் நடைபெற்றது.

இங்கு ஒரு மணி நேர வேலை நீடிப்புத் தொடர்பாகக் கண்டனத் தீர்மானத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் முன்மொழிந்தார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவா அஞ்சலா அதனை வழிமொழிந்தார்.

சர்வதேச கல்வியகத்தில் இலங்கை சார்பாக அங்கம் வகிக்கும் ஆறு ஆசிரியர் தொழிற்சங்கங்களும் ஏகமனதாக மேற்படி தீமானத்தை ஏற்றுக்கொண்டன. அத்துடன், அங்கீகரித்தன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கேற்ப சம்பள உயர்ச்சி வழங்கப்படாமை குறித்தும் பலத்த விமர்சனங்கள் எழுப்பப்பட்டன.

(எ)

## பொதுமண்டப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்த அந்த இராணுவ அதிகாரி புலிக் கொடி ஏற்றப்பட்டவுடன் தனது தலைமையத்திற்கு அறிவித்தார்.

பொதுமண்டபத்தில் கொடி ஏற்றப்பட்டு இருப்பதாகவும் இது அரச அலுவலகம் இல்லை என்றும் - அறிவித்தபோது நடவடிக்கை எதனையும் எடுக்க வேண்டாம் என இராணுவத் தலைமையகம் குறித்த அதிகாரிக்கு அறிவித்திருந்தது.

(எ-7-164)

## 2 கோடி இலங்கையரின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது சொந்த மண்ணில் இருந்து 7 லட்சம் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். 5 லட்சத்துக்கும் மேலானவர்கள் அகதிகளாக அலைகின்றனர்.

எஞ்சி இருக்கும் ஒவ்வொரு பத்துத் தமிழர்களுக்கும் ஓர் இராணுவச் சிப்பாய் என்ற அடிப்படையில் 50 ஆயிரம் இராணுவத்தினர் வடக்கு - கிழக்கில் குவித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

இயல்பு வாழ்க்கை ஏற்படவேண்டுமானால் இராணுவம் தமிழ் மண்ணில் இருந்து வெளியேற வேண்டும். இதனை நாம் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோனிடம் நேரடியாகவே தெளிவுபடுத்தியுள்ளோம்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் எமது தமிழ்த் தாயக பூமி அடையாளம் காண முடியாமல் தரை மட்டமாக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் தமது தாய் மணணில் குடியமர முடியாவிட்டாலும் கடைசியாக ஒரு தடவை தமது தாய் மண்ணைப் பார்க்கக் கூட அனுமதி இல்லாமல் அவர்கள் அவதிப்படுகிறார்கள்.

தமிழர்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்தவே திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது தாய் மண்ணில் தினமொரு கொலை விழுகின்றது.

எங்களுடைய தமிழ் மண்ணில் இருந்து சிங்கள இராணுவம் வெளியேறாவிட்டால் இந்த நாட்டில் அமைதியும், சமாதானமும், இயல்பு நிலையும் ஏற்படப்போவதில்லை.

எங்களுடைய தாயக பூமி 8 ஆயிரத்து 500 சதுர ஏக்கர் நிலப் பரப்கைக் கொண்டது. ஆனால், இன்றோ 6 ஆயிரத்து 500 சதுரச ஏக்கர்கள் கூட தமிழர்களிடம் இல்லை. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழர்களின் தாயகப் பூமி அபகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு பக்கம் திட்டமிட்ட குடியேற்றம், மறுபக்கம் இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயம்.

நாட்டை அபிவிருத்தி செய்யப்போகின்றோம். விவசாயத்தை அபிவிருத்தி செய்யப்போகின்றோம் என்று கூறுகின்றீர்கள். எங்களுடைய பூமியை அபகரித்துக்கொண்டு அங்கு எந்த அபிவிருத்தியை மேற்கொள்ளப் போகின்றீர்கள்?.

ஒரு நாட்டில் பிச்சை எடுத்து வாழும் நிலை ஏற்பட்டால் அந்த நாட்டின் அரசனுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் போராட்டம் நடத்துவதில் ஒன்றும் பிழை இல்லை.

இதே கருத்தைத்தான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கூறியுள்ளார். "நாட்டில் விலைவாசி உயர்வும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் ஏற்படும்போது மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்துவது இயல்பு" எனப் பிரதமர் கூறியுள்ளார்.

காலம் காலமாகத் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். மத்திய வங்கி முதல் சகல அரச துறைகளிலும் கடமையாற்றிய தமிழர்களின எண்ணிக்கை திட்டமிட்டுக் குறைக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு முதல் சிலாபம் வரை நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பொய் சொல்லும் உரிமை உங்களுக்கு உண்டு. ஆனால், நாங்கள் அதை நம்பவேண்டும் என எங்களை உங்களால் கட்டாயப்படுத்த முடியாது.

நாங்கள் சிங்களச் சகோதரர்களுடன் இணைந்து நட்புறவுடன் வாழவே விரும்புகின்றோம். அதற்கு நீங்கள்தான் இடங்கொடுக்க மறுக்கின்றீர்கள்.

வன்முறைகளையும், ஆயுதப் போராட்டத்தையும் நாங்கள் விரும்பவில்லை. ஆனால், அதனைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய நிலையை நீங்களே ஏற்படுத்துகின்றீர்கள்.

நாங்களும் உங்களைப் போல் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றோம். ஆனால், அதை உங்களால் ஜீரணிக்க முடியவில்லை. அதன் எதிரொலியால்தான் எங்கள் போராட்டம் ஆரம்பமானது.

எதிர்வரும் 27ஆம் திகதி, இலங்கை மக்கள் மட்டுமல்ல, சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கும் மாவீரர்தின உரையை நிகழ்த்தப் போகின்றார் தலைவர் பிரபாகரன்.

இந்த நாட்டில் வாழும் இரண்டு கோடி மக்களின் தலைவிதியை எங்கள் தலைவர் பிரபாகரனின் ஒரு வார்த்தைதான் தீர்மானிக்கப் போகின்றது.

- இப்படி ஈழவேந்தன் எம்.பி. மேலும் கூறினார்.

(எ-க)


## விசேட விலைக் கழிவில்

அழைப்பிதழ்கள், வாழ்த்து அட்டைகள், CD மற்றும் கசட் கவர்கள், Visiting Card மற்றும் வியாபார நோக்கில் டிசைனிங் செய்து பெருமளவு பிரதியாக்கம் செய்வோருக்கும் உடனுக்குடன் விசேட விலைக்கழிவில் பிரதியாக்கம் செய்துகொடுக்கப்படும்.

**மூர்த்தி லேசர் டிஜிற்றல்**

**கலர் லாப்,**

**யாழ்.வீதி – மானிப்பாய்.**

(ச-39245)


# ஐம்பது பட்டதாரிகளுக்கு நீதிமன்றங்களில் நியமனம்

காரைதீவு,நவ.23

நீதிச்சேவை ஆணைக்குழு, நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் கணக்கு விவரங்களைக் கையாள்வதற்கென 50 பட்டதாரிகளை உள்ளீர்க்கத் திட்டமிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வழங்கிய முன்மொழிவையடுத்து இந்நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜெயதிலக இதுதொடர்பாக திறைசேரியுடன் ஏற்கனவே கலந்துரையாடி ஒப்புதல் பெற்றிருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

தற்போது 50 பட்டதாரிகளை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(எ)

## தனிநாடு குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டில் இருந்து அகற்றப்படவேண்டும் என ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித்தலைவர் முருகன் சச்சிதானந்தன், இது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல. உறுப்பினரின் பேச்சைக் கட்டுப்படுத்த முடியாது. பதிவேட்டில் இருந்தும் பேச்சை நீக்க முடியாது என்று கூறினார். ஜே.வி.பி. உறுப்பினரின் ஒழுங்குப் பிரச்சினையை நிராகரித்துவிட்டார்.

குழுக்களின் பிரதித்தலைவரின் கூற்றை ஏற்க மறுத்த ஜே.வி.பியினர், தமிழ் உறுப்பினர்கள் அரசியல் அமைப்புக்கு விரோதமாகப் பேசுகின்றனர். அதைக் கட்டுப்படுத்த முடியாதா? அவருடைய பேச்சை ஏன் பதிவேட்டில் இருந்து நீக்க முடியாது- எனக் கூக்குரல் இட்டனர்.

உங்களுடைய கூச்சலுக்கு என்னால் பதில் அளிக்கமுடியாது. பதிவேட்டில் இருந்தும் ஜெயானந்தமூர்த்தி எம்.பியின் பேச்சை நீக்க முடியாது. இவ்விடயத்தை சபாநாயகர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிப்பேன் எனக் கூறி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் குழுக்களின் பிரதித் தலைவர் சச்சிதானந்தன்.

நேற்றுக்காலை சபாநாயகர் லொக்குபண்டாரவின் தலைமையில் சபை கூடியபோது ஜே.வி.பி. உறுப்பினரான எஸ்.அமரசிங்க இப்பிரச்சினையை மீண்டும் கிளப்பினார்.

இவ்விடயம் தொடர்பாகப் பரிசீலனை செய்யப்பட்டது. ஓர் உறுப்பினரின் சிறப்புரிமைகளில் நாம் கைவைக்க முடியாது. சுதந்திரமாகக் கருத்து வெளியிடுவதைத் தடுக்கவும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளில் இடமில்லை.

அதேவேளை, நிலையியற்கட்டளை 194 ஆம் விதிப்படி சட்டமா அதிபர்தான் இதற்குத் தீர்ப்பளிக்க வேண்டும் என சபாநாயகர் கூறினார். அத்தோடு, இவ்விடயம் தொடர்பாக நிலையியற் கட்டளைகளில் மாற்றம் செய்ய வேண்டுமானால் அதனைக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பேசி ஆவன செய்யலாம். ஆனால், அதற்கு முன் உறுப்பினர் ஜெயானந்தனின் பேச்சைப் பதிவேட்டில் இருந்து நீக்க முடியாது - என்றும் அவர் உறுதியாகக் கூறிவிட்டார்.

(எ-க)

## முற்றவெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்த கட்டடத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் சேதங்களைப் பார்வையிட்டார். சேதமடைந்த பகுதிகளில் கிடந்த இடிபாடுகள் அவசர அவசரமாகக் கட்டடத் திணைக்களத்தின் தொழிலாளர்களினால் அகற்றப்பட்டன.

பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பிரதம தபாலகத்தின் உறுதித் தன்மை பற்றி தாங்கள் பல தடவைகள் கட்டடத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளரிடம் பிரஸ்தாபித்தனர் என்றும், எனினும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லையெனவும் தபாலகத்தின் உயர் அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

ஒரு வருடத்திற்கு முன்பே இந்தக் கட்டடத்தின் பணிகள் பூர்த்திய[illegible]கி இருந்தன. கடந்த இரு மாதங்களாகவே யாழ். பிரதம தபாலகம் அங்கு இயங்கிவருகின்றது.

(எ-8-15-17-139)

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை எடுக்க வேண்டும் எனத் தாம் சம்பந்தப்பட்டோரிடம் கேட்டதாக மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

எனினும், பொலீஸார் சந்திப்பில் கலந்து கொள்ளாமையால் இது தொடர்பாக முடிவும் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் -

அடுத்த வாரம் இடம்பெறும் கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்றும் - பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரது தரப்பில் உரை நிகழ்த்திய பிரிகேடியர் சிறீநாத் ராஜபக்ஷ, பொதுவான விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் - சந்திப்பு சுமுகமாக நடந்ததாகவும் - தெரிவித்தார்.

இதுதொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்ட பிரதான அதிகாரி பி.ஆர். ஷெனபி கருத்துத் தெரிவித்தபோது -

இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பை புலிகள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக ஏற்பாடு செய்ததாகவும் -

முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்கவில்லை என்றும் - எதிர்வரும் வாரமே முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-7-164)

## மரண அறிவித்தல்

### திருமதி பஞ்சாட்சரேஸ்வரி கிருஸ்ணதேவா



(திரவியம்)

யாழ்ப்பாணம், ஸ்ரேசன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் ஆஸ்பத்திரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சாட்சரேஸ்வரி கிருஸ்ணதேவா அவர்கள் 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணதேவா (முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் சகுந்தலாதேவி (கொலண்ட்), நந்தகுமார் (ஊழியர், யாழ்.பல்கலைக்கழகம்), குருதேவ் (பிரான்ஸ்), மின்னொளிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவராசா (கொலண்ட்), கிருபானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திரஜித், மதுசன், மைதிலி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சோதிநாதன், காலஞ்சென்ற சொக்கநாதன், இலங்கேஸ்வரி குணேஸ்வரி, காலஞ்சென்ற தில்லைநாதர்மூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2004 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'இரத்தின வில்லா',*
*ஆஸ்பத்திரி ஒழுங்கை,*
*மானிப்பாய்.*

தகவல்:
நந்தகுமார்
(மகன்).

(38880) (29-13-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org